வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

ఈළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 01 | 17.09.2021 வெள்ளிக்கிழமை | இதழ் : 286 | பக்கங்கள் : 16





## மேலும் 118 பேர் மரணம்

கொழும்பு, செப். 17

நாட்டில் மேலும் 118 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் 15

# வெடுக்குநாறி சிவன் ஆலயத்தில் நேற்று அதீத இராணுவ பிரசன்னம்!

- பௌத்த மயமாக்கும் நடவடிக்கை தீவிரம்
- முக்கியஸ்தர்கள் சிலர் இரகசிய விஜயம்
- வழிபடப்பட்ட சிலைகள் சில மாயம்; சேதம்
- தமிழர் பூர்வீக தலத்தை காக்குமாறு அழைப்பு

நெடுங்கேணி, செப்ரெம்பர் 17

தமிழர்களின் பழம்பெரும் ஆலயமாகக் கருதப்படும் வவுனியா - நெடுங்கேணி - வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தை ஆக்கிரமித்து - பௌத்த மயமாக்கும் நடவடிக்கைகள் அதீத இராணுவ பிரசன்னத்தின் மத்தியில் இரகசியமாக முன்னெடுக்கப்படுகின்றன. இதற்காக நேற்று அந்தப் பகுதிக்கு முக்கியஸ்தர்கள் சிலர் இரகசிய விஜயம் செய்தனர் என்று அந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். 15

## நாடு திரும்பும் இலங்கையர்களுக்கான தனிமைப்படுத்தல் விதிகளில் மாற்றம்

கொழும்பு, செப். 17

இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுக்கொண்டு நாடு திரும்பும் இலங்கையர்கள் பி.சி.ஆர். பரிசோதனைக்காக ஹோட்டல்களில் தங்கவேண்டிய அவசியமில்லை என்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல அறிவித்துள்ளார். 15

## தமிழ் அரசியல் கைதிகளின் மறுவாழ்வுக்கு உதவுவேன்

### அ'புரம் சிறைச்சாலைக்கு சென்ற நாமல் உறுதி

கொழும்பு, செப். 17

தமிழ் அரசியல் கைதிகள் குற்றச்சாட்டுகளில் இருந்து விடுவிக்கப்பட்டவுடன் அவர்களின் மறுவாழ்வு மற்றும் சமூகத்தில் மீண்டும் ஒருங்கிணைப்பது உள்ளிட்ட அவர்களின் பிரச்னைகளை கவனிப்பேன் என உறுதியளித்துள்ளார் விளையாட்டுத் துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ.

அனுராதபுரம் சிறையில் உள்ள கைதிகளை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ நேற்று பார்வையிட்டார்.

சிறைச்சாலை முகா 15

## புலிகளுக்கு எதிராக பேசவைக்கவே சுமந்திரன், கஜேந்திரகுமார் முயற்சி

### சித்தார்த்தன் எம். பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 17

எம்மை தூண்டி விடுவதற்கே புளொட் மீது குற்றச்சாட்டுக்களை சுமந்திரனும், கஜேந்திரகுமாரும் தெரிவிக்கிறார்கள். நாம் இதற்கு சரியாக பதில் சொல்ல முயன்றால், அந்த பதில்கள் எமக்கு எதிராக மட்டுமல்ல, புலிகளுக்கு எதிராகவும் பயன்படுத்தப்படும். ஆகவேதான், எங்களை தூண்டிவிட இருவரும் முயற்சிக்கிறார்களோ என்று சந்தேகிக்கிறேன் 15

## தமிழ் அரசியல் கைதி நீதிமன்றால் விடுதலை!

கொழும்பு, செப். 17

வழக்கு தாக்கல் செய்யப்படாமல் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதி ஒருவர் நேற்று மாலை விடுதலை செய்யப்பட்டார்.

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த நடேசு குகநாதன் என்பவரே இவ்வாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டார். 15

## அடிகாயங்களுடன் மாவிட்டபுரத்தில் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், செப். 17

மாவிட்டபுரத்தில் காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்துக்கு அண்மையாக உள்ள வீதியில் அடிகாயங்களுடன் சடலம் ஒன்று நேற்று மாலை மீட்கப்பட்டது.

இதுதொடர்பில் தக 15

## நேற்று 2,271 பேருக்கு கொரோனா தொற்று

கொழும்பு, செப். 17

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று உறுதியான மேலும் 2 ஆயிரத்து 271 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச் 15



# இப்படியும் நடக்கிறது...!

வாசகர் ஒருவரிடமிருந்து ஒரு கடிதம் வந்திருந்தது. அதுவும் இந்த ஊர்க்குருவிக்கு முகவரி இடப்பட்டு.

'அது என்ன உள்ளூர் விடயங்களை மாத்திரமே அலசிக்கொண்டிருக்கிறீர்கள். கொழும்பில் நடக்கின்ற சங்கதிகளையும் தரலாம்தானே' என்ற கோரிக்கையுடன் வந்திருந்தது கடிதம்.

இந்த ஊர்க்குருவி அவ்வளவு தூரத்திற்கு பறக்கக்கூடிய குருவி அல்ல என்பது அவருக்குத் தெரிந்திருக்க நியாயமில்லைத்தானே. இருந்தாலும் யாராவது தொடர்புகொண்டு தருகின்ற சங்கதிகளை அவ்வப்போது தந்திருக்கிறேனே என்று மட்டும் சொல்ல முடியும்.

கொழும்பு சங்கதிகளைத்தான் நமது இராஜதந்திரியார் அலுசுகிறார்தானே.

நேற்று முன்தினம் இந்தப்பத்தியில் மறவன்புலவு சச்சிதானந்தம் குறித்து எழுதியிருந்தேன்.

அவர் இலங்கை சிவசேனை என்ற அமைப்பைத் தொடங்கி செய்துவருகின்ற பணிகள் பற்றிய எனது சந்தேகத்தையும், அவர் மத ரீதியாக தமிழ் மக்களை பிரிக்கப்பார்க்கிறார் என்ற குற்றச்சாட்டுக்கள் குறித்தும் அங்கு பிரஸ்தாபித்திருந்தேன்.

அதனைப்படித்துவிட்டு ஒரு பெரியவர் ஒரு குறுந்தகவல் அனுப்பியிருந்தார். அவர் பற்றி அதிகம் அறிந்திருந்தாலும், நேரடியான அறிமுகம் எதுவும் இருந்ததில்லை. ஓய்வுநிலையில் இருக்கும் அவர் பல்வேறு அதிஉயர் பதவிகளை வகித்தவர்.

'ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் சச்சிதானந்தம் அந்தப் போராட்டத்தை நடத்தியிருக்காவிட்டால் இன்று அளவ்வையிலும் குளியாப்பிட்டியிலும் சைவக் கோவில்களே இருந்திருக்காது' என்று இருந்தது அந்தத் தகவல்.

ஆங்கிலத்தில் வந்திருந்த அந்த தகவல் எதைப்பற்றிக் குறிப்பிடுகின்றது என்பதைப் புரிந்துகொள்ள இந்த ஊர்க்குருவிக்கு அதிக நேரம் எடுக்கவில்லை.

'பாரிஸ் ஈழநாடு'வில் மறவன்புலவர் முன்னர் ஒரு தொடர் எழுதியபோது ஒரு வாரம் அந்த விடயத்தை எழுதியிருந்ததால், இவர் எதைக் குறிப்பிடுகிறார் என்பது பட்டென்று புரிந்தது.

சிறிமாவோ பண்டாரநாயக்கா ஆட்சியில், குமாரசூரியர் அமைச்சராக இருந்தார். சிறிமாவோவின் மிக நம்பிக்கைக்குரிய ஒருவராக இருந்த அவரை நியமன எம்.பியாக்கி அமைச்சராக்கியிருந்தார் சிறிமாவோ.

தனது பதவிக்காலத்தில் பல விடயங்களை செய்யவேண்டும் என்று நினைத்த குமாரசூரியர், இந்துக் கோவில்கள் தொடர்பாக ஒரு தற்காலிக சட்டத்தைக் கொண்டுவர விரும்பினார். யார் அவருக்கு அந்த ஆலோசனையைச் சொன்னார்களோ தெரியவில்லை. அந்த சட்டம், இந்து ஆலயங்களில் வழிபடுகின்ற பக்தர்களே அந்த ஆலயங்களை நிர்வகிக்க வழிசெய்கின்ற சட்டம் அது.

அதனைக் கொண்டு வர அவர் விரும்பியபோதிலும் அதனை இந்து மாமன்றம் தனக்கு ஒரு கோரிக்கையாக விடுக்கவேண்டும் என்றும் அதன்பின்னர் அதனை பாராளுமன்றில் கொண்டுவரவும் குமாரசூரியர் விரும்பினார்.

இதுதொடர்பாக முடிவெடுப்பதற்காக இந்து மாமன்றம் பம்பலப்பட்டி சரஸ்வதி மண்டபத்தில் கூடியது. அப்போது அதன் தலைவராக இருந்த நீதியரசர் சிவசுப்பிரமணியம், 'ஈழநாடு' ஸ்தாபகர் கே. சி. தங்கராசா போன்றவர்கள் அங்கு கூடி முடிவெடுத்து குமாரசூரியருக்கு கோரிக்கை வைக்கவிருந்தனர்.

அந்தவேளையில் இளைஞனாக இருந்த மறவன்புலவு சச்சிதானந்தம் தனது இருபது நண்பர்களை அழைத்துக் கொண்டு அந்தக் கூட்டம் நடக்கின்ற மண்டபத்தை முற்றுகையிட்டார். அந்த இளைஞர்கள் கூட்டத்தில் இருந்தவர்களில் ஒருவர் பின்னர் இந்து மாமன்றத்தின் தலைவராக உயர்ந்து அண்மையில் காலமான சட்டவலுநர் திருநீலகண்டன்.

இவர்களின் அந்த ஆர்ப்பாட்டத்தால் அந்த இந்துக் கோயில்கள் பற்றிய தற்காலிக சட்டமூலம் வருவது தடைப்பட்டது.

அந்தச் சட்டம் அப்போது அமுலுக்கு வந்திருந்தால், ஆலயங்களின் பக்தர்களே ஆலயங்களை நிர்வகிக்கின்ற நிலைமை வந்திருக்கும்.

வடக்கு, கிழக்கில் உள்ள ஆலயங்கள் எல்லாம் இப்போது நீதிமன்ற படிகளை ஏறி இறங்கிக் கொண்டிருக்கும்.

அதுவல்ல ஆர்ப்பாட்டக்காரர்களின் முக்கிய நோக்கம், தெற்கில் அளவ்வையிலும் பொல்காவலையிலும் இருக்கின்ற ஆலயங்களில் வழிபடுபவர்கள் (சிங்கள மக்கள்) கைகளில் ஆலய நிர்வாகம் சென்றிருந்தால் இன்று அந்த ஆலயங்களில் எல்லாம் புத்தர் அமர்ந்திருப்பர்.

சச்சிதானந்தமும் அவரின் நண்பர்களும் ஐம்பது வருடங்களுக்கு முன்னரே தீர்க்கதரிசனத்துடன் அந்த சட்டமூலத்தை எதிர்க்காமல் விட்டிருந்தால்...!

**- ஊர்க்குருவி**

# வடக்கில் 15 நாட்களில் 225 பேர் தொற்றால் மரணம்!

யாழ்ப்பாணம், செப். 17

வடக்கு மாகாணத்தில் இந்த மாதத்தின் முதல் 15 நாட்களிலும் 6 ஆயிரத்து 667 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். அத்துடன் 225 பேர் உயிரிழந்தனர்.

வடக்கு மாகாணத்தில் ஓகஸ்ட் மாதத்தில் 228 பேர் கோவிட்-19 நோயால் உயிரிழந்த நிலையில் இந்த மாதத்தின் முதல் 15 நாள்களில் 225 பேர் உயிரிழந்தனர்.

சுகாதாரத் துறையின் அறிக்கையின் படி, நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 42 தொற்றாளர்களும் வவுனியா மாவட்டத்தில் 59 தொற்றாளர்களும் கிளிநொச்சி மாவட்டத்தில் 64 தொற்றாளர்களும் முல்லைத்தீவில் 25 தொற்றாளர்களும் மன்னாரில் 10 தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 3 பேரும் வவுனியா மாவட்டத்தில் 4 பேரும் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் தலா இருவரும் கோவிட்-19 நோயால் உயிரிழந்தனர்.

2020 மார்ச் தொடக்கம் நேற்றுவரை வடக்கு மாகாணத்தில் 33 ஆயிரத்து 737 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அத்துடன் 634 பேர் கோவிட்-19 தொற்றால் உயிரிழந்தனர். அதிகப்படியாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 15 ஆயிரத்து 618 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அத்துடன் 356 பேர் உயிரிழந்தனர். (ஐ-3)

## சிறுகதை எழுத்தாளர் நந்தினி சேவியர் காலமானார்



திருகோணமலை, செப். 17

சிறுகதைகள் மூலம் புகழ் பெற்ற ஈழத்தின் மூத்த எழுத்தாளர் நந்தினி சேவியர் (வயது 72) நேற்று காலை திருகோணமலையில் காலமானார்.

யாழ்ப்பாணம் - தென்மராட்சி - மட்டுவிலை பிறப்பிடமாக் கொண்ட அவர், கல்வியின் பின்னர் இளவயதிலேயே இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் வாலிப சங்க இயக்கத்தில் இணைந்து செயல்பட்டார். அத்துடன், இலக்கியம், சமூக செயல்பாடுகளிலும் தீவிர ஈடுபாடு காட்டினார்.

1967 ஆம் ஆண்டும் எழுத்துத் துறையில் தடம்பதித்த அவர் கவிதை, சிறுகதை, நாவல், பத்தி, விமர்சனக்கட்டுரை ஆகிய துறைகளில் தமது ஆளுமையாளராக இருந்தார். அவருடைய பத்தி எழுத்துக்கள் மற்றும் கட்டுரைகள் சில வ.தேவசகாயம், தாவீது கிறிஸ்ரோ ஆகிய பெயர்களிலும் வெளிவந்துள்ளன.

இவரின் படைப்புகள் ஈழநாடு, சிந்தாமணி, வீரகேசரி, தொழிலாளி, சுதந்திரன், ஈழமுரசு வார இதழ்களிலும் தாயகம், மல்லிகை, வாகை, அலை, புதுசு, இதயம், ஒளி சஞ்சிகைகளிலும், ஆகிய சஞ்சிகைகளிலும் வெளியாகியுள்ளன.

2012 ஆம் ஆண்டிலிருந்து 'தரம் 10 தமிழ்மொழியும் இலக்கியமும்' என்ற பாடநூலில் 'நந்தினி சேவியர் சிறுகதைகள்' என்ற முருகையனின் கட்டுரை சேர்க்கப்பட்டுள்ளது. (ஐ)

## கல்வி TV CHANNEL-1 — 17.09.2021 வெள்ளிக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | தமிழ் |
| 08.15 | தரம்-10 | வரலாறு |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | சித்திரம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | வரலாறு |

## கல்வி TV CHANNEL - 2 — 17.09.2021 வெள்ளிக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | English |
| 09.45 | தரம்-03 | அழகியல் |
| 10.30 | தரம்-03 | கணிதம் |
| 11.15 | தரம்-04 | English |
| 12.30 | தரம்-04 | கணிதம் |
| 01.15 | தரம்-05 | Singalam |
| 02.00 | தரம்-05 | கணிதம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | English |
| 06.00 | தரம்-03 | அழகியல் |
| 06.45 | தரம்-03 | கணிதம் |
| 07.30 | தரம்-04 | English |
| 08.15 | தரம்-04 | கணிதம் |
| 09.00 | தரம்-05 | Singalam |
| 09.45 | தரம்-05 | கணிதம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | அழகியல் |
| 12.30 | தரம்-03 | கணிதம் |
| 01.15 | தரம்-04 | English |
| 02.00 | தரம்-04 | கணிதம் |
| 02.45 | தரம்-05 | Singalam |
| 03.30 | தரம்-05 | கணிதம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
17.09.2021 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், புரட்டாசி 01

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# கே. பி. மீது விசாரணை?

நீண்ட இடைவெளிக்கு பின்னர் தமிழ்த் தேசிய அரசியல் சூழலில் கே. பி. எனப்படும் குமரன் பத்மநாதனின் பெயரை தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் உச்சரித்திருக்கின்றனர். முதலில் சுமந்திரன் உச்சரித்திருந்தார். பின்னர் அதற்கு பதிலளிக்கும் வகையில் மற்றவர்கள் உச்சரித்திருக்கின்றனர். இலங்கை தமிழ் அரசு கட்சி, ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளருக்கு அனுப்பிய கடிதத்தில், தமிழீழ விடுதலைப் புலிகளின் போர்க் குற்றங்களில் ஈடுபட்டதான பதிவு இருக்கின்றது. இது ஒரு புதிய விடயமல்ல. ஐ. நா. செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் விடயம்தான் இது. இதனையே தமிழ் அரசு கட்சி நினைவுபடுத்தியிருக்கின்றது.

12 வருடங்களுக்கு பின்னர் இதனை நினைவுபடுத்த வேண்டிய அவசியம் இல்லை. ஆனாலும் சம்பந்தனின் கையெழுத்துடன் அனுப்பப்பட்ட கடிதத்தில், இந்த விடயம் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இது தொடர்பான கேள்விக்கு பதிலளிக்கும்போது, எம். ஏ. சுமந்திரன், பக்கம் சார்ந்து நீதியை கோர முடியாது. தான் அப்படி கேட்கமாட்டேன் என்று குறிப்பிட்டிருக்கின்றார். ஆனால், மறுபுறமோ, தேர்தல் காலத்தில் இதே தமிழ் அரசு கட்சியின் மேடைகளில் விடுதலைப் புலிகள் போற்றப்படுகின்றனர். பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், விடுதலைப் புலிகளின் தலைவரின் பிறந்தநாளை பாராளுமன்றத்தில் நினைவுகூருகிறார். புலிகளின் தலைவரை தேசியத் தலைவர் என்கிறார். கடந்த பாராளுமன்ற தேர்தலின்போது, சுமந்திரன் தனது வெற்றிக்காக, இதே சிறிதரனுடன்தான் தேர்தல் கூட்டு வைத்திருந்தார். அது எப்படி சாத்தியம்? சுமந்திரன் பக்கம் சாராது இருக்க வேண்டுமென்று நினைப்பதற்கு அவருக்கு உரிமையுண்டு. ஆனால், அதனை அவர் எவ்வாறு கூட்டமைப்பிலிருந்து கொண்டு செய்ய முடியும்? அது முற்றிலும் முரண்பாடான ஒன்றல்லவா!

இந்த நிலையில்தான் விடுதலைப் புலிகள் விசாரிக்கப்பட்டால், விடுதலைப் புலிகளின் சார்பில், கே. பி., கருணா போன்றவர்கள்தான் விசாரிக்கப்படுவர். அதனை ஏன் மற்றவர்கள் எதிர்க்கின்றனர் என்றும் சுமந்திரன் கேள்வி எழுப்பியிருக்கின்றார். இதனைத் தொடர்ந்துதான் கே. பி விவகாரம் நீண்ட இடைவெளிக்கு பின்னர் எட்டிப்பார்த்திருக்கின்றது. கே. பியை விசாரிக்க வேண்டுமாயின், அவர் கைது செய்யப்பட்டு இலங்கைக்கு கொண்டு வரப்படுவதற்கு முன்னைய காலத்தில், அவர் மேற்கொண்ட செயல்பாடுகளையே விசாரிக்க முடியும். கே. பியின் செயல்பாடுகள் எவையும் அவரின் தனிப்பட்ட நலன்களுக்காக மேற்கொள்ளப்பட்டதல்ல. அது முற்றிலும் புலிகளின் விடுதலைப் போராட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்ட செயல்பாடுகள். அதேவேளை கே. பியை விசாரித்தல் என்பது, அவருடன் மூன்று தசாப்தங்களாக இணைந்து பணியாற்றிய, உலகெங்குமுள்ள பல தமிழ் செயல்பாட்டாளர்களையும் நெருக்கடிக்குள்ளாக்கும்.

எனவே, விடுதலைப் புலிகளை விசாரித்தல் என்னும் கோரிக்கையை தமிழ்த் தேசிய பரப்பிலுள்ளவர்கள் கூறுகின்றபோது, அதன் பெறுமதி சிக்கலானது. அரசாங்கம் அவ்வாறு கூறலாம் அது அவர்களின் பிரச்னை. ஆனால், இவ்வாறான சர்ச்சைகளில் ஏன் தமிழ் கட்சிகள் ஈடுபடுகின்றன? அதிலும் தேர்தல் காலத்தில் விடுதலைப் புலிகளைப் போற்றி வாக்குகளை பெறுபவர்கள் ஏன் இவ்வாறு கூற வேண்டும். மேலும், சித்தார்த்தனை விசாரிக்க வேண்டுமென்றும் சுமந்திரன் குறிப்பிட்டிருக்கின்றார். சித்தார்த்தன் 2012களிலிருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கத்துவம் வகித்துவருகின்றார். 2013இல் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றார். பின்னர், தொடர்ச்சியாக கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினராக இருக்கின்றார். சித்தார்த்தன் போர்க் குற்றவாளி என்னும் விடயம் இதுவரைகாலமும் சுமந்திரனுக்கு தெரியாதா? சித்தார்த்தன் விசாரிக்கப்பட வேண்டுமென்றால், கடந்த 10 வருடங்களாக அவருடன் இணைந்து செயல்பட்டுவரும் சம்பந்தன், சுமந்திரன் ஆகியோருமல்லவா விசாரிக்கப்பட வேண்டும்!

உண்மையில் கூட்டமைப்பை, தமிழ் அரசு கட்சி என்ன செய்ய விரும்புகின்றது? ஏன் இவ்வாறான குழப்பங்களை சுமந்திரன் ஏற்படுத்துகின்றார்? சம்பந்தன் ஏன் இதனையெல்லாம் கண்டும் காணாமல் இருக்கின்றார்? சம்பந்தன் முற்றிலும் செயலிழந்து விட்டாரா? இந்த குழப்பங்களால் பாதிக்கப்பட்ட தமிழ் இனத்திற்கு என்ன நன்மை?

# அராஜகத்தின் உச்சம்!

- அலசுவது இராஜதந்திரி -



*அநுராதபுரம் சிறைச்சாலைக்குள் கடந்த ஞாயிற்றுக்கிழமை (12) கைத்துப்பாக்கியுடன் புகுந்து அங்குள்ள தமிழ் அரசியல் கைதிகளை மிரட்டியதோடு, அவர்களில் இருவரை தம் முன்பாக மண்டியிட வைத்துள்ளார் சிறைச் சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக் கைதிகள் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த.*

*தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை வேண்டி இடையறாது கோரிக்கைகள் விடுக்கப்பட்டுவரும் தருணத்தில் அநுராதபுரம் சிறைச்சாலையில் சிறைக்கைதிகளின் புனர்வாழ்வுக்கு பொறுப்பான இராஜாங்க அமைச்சரே தமது மனம்போன நடந்து கொண்டுள்ளார்.*

*இதுதவிர, தற்போது ஜெனிவாவில் இடம்பெற்று வரும் 48ஆவது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை மாநாட்டில் இலங்கையில் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை குறித்தும் வலியுறுத்தப்பட்டுள்ளதன் பின்னணியில் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த அடாவடித்தனமாக நடந்து கொண்டுள்ளார்.*

*தமிழ் அரசியல் கைதிகளைப் பொறுத்தவரை சிறைவாசம் என்பது சிம்மசொப்பனமாகும். 1983 கறுப்பு ஜூலை கலவரத்தின் போது வெலிக்கடைச் சிறைச்சாலையில் தமிழ் கைதிகள் சக சிங்கள கைதிகளால் கொல்லப்பட்டமை மற்றும் களுத்துறை சிறையில் சில வருடங்களுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள், வவுனியா சிறையில் தமிழ் கைதிகள் தாக்கப்பட்டமை போன்ற சம்பவங்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவையாகும்.*

*இத்தகைய பின்னணியிலேயே இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த அநுராதபுரம் சிறைக்குள் தமது பெண் தோழி ஒருவரோடு நுழைந்ததோடு தமது கைத்துப்பாக்கியால் தமிழ் கைதிகளை மிரட்டியுள்ளார். சிறைக்கைதிகளின் பாதுகாப்பு மற்றும் புனர்வாழ்வுக்கு பொறுப்பான இராஜாங்க அமைச்சரான லொஹான் ரத்வத்தவின் இச்செயல் தமிழ் கைதிகளின் பாதுகாப்பை கேள்விக்குரியதாக்கி விட்டுள்ளதுடன் அரசின் ஓர் அமைச்சு உறுப்பினர் எவ்வளவு தூரம் தமது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்கின்றார் என்பதையும் எடுத்துக்காட்டியிருந்தது.*

*இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த ஏற்கனவே பல சர்ச்சைகளுக்குள்ளாகியிருந்தவர். 2001ஆம் ஆண்டு கண்டி உடதலவின்ன பகுதியில் பத்து முஸ்லிம் இளைஞர்களை சுட்டுக்கொலை செய்தமை தொடர்பாகவும் குற்றஞ்சாட்டப்பட்டவர் லொஹான ரத்வத்த என்பது குறிப்பிடத்தக்கது.*

*இதுதவிர, லொஹான் ரத்வத்த கொழும்பில் பிஜி நாட்டைச்சேரந்த ரக்பி விளையாட்டு வீரர் ஒருவரை பெண்ணொருவர் சம்பந்தப்பட்ட பிரச்னை காரணமாக கொழும்பில் சூதாட்ட நிலையம் ஒன்றில் வைத்து சுட்டுக் கொன்றிருந்தார். ஆட்கொலை மற்றும் வேறு அடாவடித்தனமான நடவடிக்கைகளில் லொஹான் ரத்வத்த கடந்த காலங்களில் ஈடுபட்டிருந்தவர் என்று குற்றஞ்சாட்டப்பட்டிருந்த போதிலும் அவரால் சட்ட நடவடிக்கைகளிலிருந்து தப்பி வரக்கூடியதாகவே இருந்தது. இதற்குக் காரணம் அவரது தந்தையார் அன்றைய பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவின் நெருங்கிய உறவுக்காரர். தமது தந்தையாரும் பாதுகாப்புத்துறைக்கு பொறுப்பாக இருந்த நிலையில் தமது மனம்போன போக்கில் லொஹான் ரத்வத்த நடந்து கொண்டார். அத்துடன், தமக்கு எதிரான குற்றச்சாட்டுகளிலிருந்தும் இலகுவில் தப்பிக்கொண்டார்.*

*ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் வலியுறுத்தலின் பேரில் அநுராதபுரம் சிறைச்சாலை சம்பவம் தொடர்பாக லொஹான் ரத்வத்த தமது இராஜாங்க அமைச்சர் பதவியை ராஜினாமா செய்துள்ளார்.*

*இருந்தபோதிலும் தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் லொஹான் ரத்வத்த கைது செய்யப்பட வேண்டுமென அரசிடம் வலியுறுத்தியுள்ளனர்.*

*சிறைக்கூடத்துக்குள் தமது கையில் துப்பாக்கியோடு சென்றமை லொஹான் ரத்வத்த புரிந்த முதலாவது தவறாகும். இதன் பின்னர் துப்பாக்கி முனையில் தமிழ் கைதிகளை மிரட்டியது மாபெரும் தவறாக இருக்கின்றது.*

*தற்போது ஜெனிவாவில் 48-வது மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடர் இடம்பெற்றுவரும் தறுவாயில் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த அநுராதபுரத்தில் நடந்து கொண்ட விதம், இலங்கை ஆட்சியாளர்களின் மனித உரிமைகள் மீறல்களை அப்பட்டமாக வெளிப்படுத்தியுள்ளது.*

*இந்நிலையில் ஓர் இராஜாங்க அமைச்சரே தம்மை பயமுறுத்திய நிலையில் வெளி உலக தொடர்புகளின்றி இருக்கும் தமிழ் கைதிகள் தமது பாதுகாப்புபற்றி மேலும் அச்சங்கொள்வர். எனவே, ஆட்சியாளர்கள் தமிழ் அரசியல் கைதிகளின் பாதுகாப்பை உரிய வகையில் உறுதி செய்ய வேண்டியது இன்றியமையாததாகின்றது.*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



செப்ரெம்பர் - 17 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம் - புரட்டாதி 01
நல்ல நேரம் : 9.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : துவாதசி




**மேடம்**
உற்றவர்களின் செயல்பாடுகள் நிம்மதி தரும். பயம் நீங்கும். எந்தச் செயலிலும், பேச்சிலும் மிகுந்த கவனம் தேவை. அமைதி கூடும். பெண்கள் புதிய நட்பால் உற்சாகம் அடைவீர்கள்.

**இடபம்**
பரபரப்பாக செயல்பட்டு பணியை முடித்து பாராட்டு பெறுவீர்கள். கவலை நீங்கும். சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள். நேற்றைய பகை மாறி, சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள்.

**மிதுனம்**
வீடு மாற்றம் உறுதியாகலாம். சகோதர வழிப் பிரச்னை தீரும். பிணை கையெழுத்தால் ஏற்பட்ட தொல்லை முடிவிற்கு வரும். தொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் அதிகரிக்கும்.

**கடகம்**
உங்கள்மீது உயர்ந்தோர் வைத்த மதிப்பும், மரியாதையும் உயரும். புதிய நண்பர்கள் இணைவர். வீடு கட்டுவீர்கள். செலவு கூடும். பரபரப்பாகச் செயல்படுவீர்கள். தூரத்திலிருந்து நல்லசெய்தி வரும்.

**சிம்மம்**
தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிர்பார்த்தபடி பணம் வரும். உங்கள் கொள்கையை கொஞ்சம் தளர்த்திக் கொள்ள வேண்டி வரும். நல்லவர்களின் உதவி கிடைக்கும். எதிரிகள் மனம் மாறுவர்.

**கன்னி**
சமூகத்தில் உங்கள் மதிப்பு கூடும்படியான செயல்களை செய்வீர்கள். யாரைப் பற்றியும் குறைகூறி வம்பில் மாட்டாதீர்கள். எப்போதோ செய்த தவறு பற்றி தாமதமாக சிரமம் ஏற்படும்.

**துலாம்**
விலகிச் சென்றவர் விரும்பி வந்து சேரும்போது இன்முகம் காட்டுங்கள். குடும்பத்தைச் சேர்ந்த ஒருவருக்காக சுபச்செலவு ஏற்படலாம். சகோதர, சகோதரியின் ஆதரவு கிடைக்கும். பணவரவு உண்டு.

**விருட்சிகம்**
பணி சிறக்கும். நல்லவர்களின் தொடர்பால் நலம் விளையும். தேவைகள் பற்றிய கவலை தீரும். சிறு சிறு குழப்பம் ஏற்படும். கடல் தாண்டி வரும் செய்தி சந்தோஷம் தருவதாக அமையும்.

**தனுசு**
வியாபாரத்தில் வேலையாட்களின் முயற்சியால் நன்மை வரும். பணியிடத்தில் உங்களை மற்றவர்கள் வியந்து பாராட்டுவர். பிரச்னைகளுக்கு முனைப்புடன் முற்றுப்புள்ளி வைப்பீர்கள்.

**மகரம்**
நல்ல நண்பர்களுக்காக செலவிடும் சூழல் உருவாகும். வாகனம் ஓட்டும்போது கவனம் தேவை. மகிழ்ச்சி கூடும். மற்றவர்களிடம் விட்டுக் கொடுத்து செல்வது நல்லது.

**கும்பம்**
குதூகலம் ஏற்படும். எதிர்பாராத வீண் செலவுகள் உண்டு. காதலில் முன்னேற்றம் ஏற்பட்டு மகிழ்ச்சி நிலவும், உறுதியோடு செயல்படுவீர்கள். எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும்.

**மீனம்**
வீட்டைப் புதுப்பிக்க எடுத்த முயற்சியில் வெற்றி காண்பீர்கள். புதிய பொருள் சேர்க்கை உண்டு. உறவினர்கள் உதவி கேட்டு வரலாம். முன்னேறுவதற்கான சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும்.

# தமிழ்நாட்டில் நிரந்தரமாக தி.மு.க. ஆட்சி தொடர்ந்து நடைபெற வேண்டும்

## தி.மு.க.வின் முப்பெரும் விழாவில் ஸ்டாலின் அழைப்பு




சென்னை, செப். 17

“தமிழ்நாட்டில் நிரந்தரமாக நமது ஆட்சிதான் நடைபெற வேண்டும். நிரந்தரமான ஆட்சிக்கு தேவையான அடித்தளத்தை தொண்டர்கள் உருவாக்க வேண்டும். பெரியார்களின் பிள்ளைகள் நாம், அண்ணாவின் தம்பிகள் நாம், கலைஞரின் உடன்பிறப்புகள் நாம் என கட்சியிலும் ஆட்சியிலும் நிரூபித்து வண்ணமிகு தமிழ் நாட்டை உருவாக்க வேண்டும்” என தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

பெரியார் பிறந்த நாளான செப்டம்பர் 17, அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15, திமுக தொடங்கப்பட்ட செப்டம்பர் 17 ஆகிய மூன்று முக்கிய நிகழ்வுகளையும் இணைத்து தி.மு.க. சார்பில் முப்பெரும் விழா கொண்டாடப்பட்டு வருகிறது. அதன்படி தி.மு.கவின் முப்பெரும் விழா சென்னை அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் பேசிய முதல்வரும் தி.மு.க. தலைவருமான ஸ்டாலின், “கடந்தமுறை முப்பெரும் விழா நடைபெற்றபோது 8 மாதம் பொறுத்திருங்கள், நாம் ஆட்சிக்கு வரப் போகிறோம் என்று சொன்னேன். தற்போது ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. தொண்டர்கள் இல்லாமல் இந்த வெற்றி இல்லை, உங்கள் தியாகத்தால், உழைப்பினால், வியர்வையால் கிடைத்த வெற்றி இதுவாகும்.

விரைவில் ஊரக உள்ளாட்சி தேர்தலை சந்திக்க இருக்கிறோம். அதைத்தொடர்ந்து நகர்புற உள்ளாட்சித் தேர்தலையும் சந்திக்க இருக்கிறோம். எதிர்க்கட்சியாக இருந்தபோது 60 முதல் 70 சதவிகிதம் வென்ற நாம் ஆளும் கட்சியாக நூற்றுக்கு நூறு சதவிகிதம் வெற்றி பெற வேண்டும். இனி தமிழ்நாட்டில் நிரந்தரமாக நமது ஆட்சிதான் நடைபெற வேண்டும்” எனத் தெரிவித்தார்.

# முன்னாள் அமைச்சர் கே.சி. வீரமணி வீட்டில் நேற்று அதிரடி சோதனை!



சென்னை, செப். 17

அதிமுக முன்னாள் அமைச்சர் கே.சி. வீரமணிக்குச் சொந்தமான இடங்களில் லஞ்ச ஒழிப்புத் துறை நேற்று அதிகாலை முதல் அதிரடியாக சோதனை நடத்தியது. அ.தி.மு.கவினர் இதனைக் கடுமையாகக் கண்டித்திருப்பதுடன், இது பழிவாங்கும் செயல் எனவும் கூறியுள்ளார்கள்.

கடந்த அதிமுக ஆட்சியில், முக்கிய இலாகாவான பத்திரப் பதிவு மற்றும் வணிக வரித்துறை அமைச்சராக இருந்தவர் கே.சி. வீரமணி. அமைச்சராக இருந்தபோது வருமானத்துக்கு அதிகமாகச் சொத்து சேர்த்ததாக கே.சி. வீரமணிமீது குற்றச்சாட்டு எழுந்தது.

இந்நிலையில் முன்னாள் அமைச்சருக்குத் தொடர்புடைய இடங்களில் நேற்று அதிகாலை முதல் லஞ்ச ஒழிப்புத் துறை சோதனை நடைபெற்றது. சென்னை, வேலூர், ஏலகிரி, திருவண்ணாமலை உள்ளிட்ட கே.சி. வீரமணிக்குச் சொந்தமான மற்றும் அவருக்குத் தொடர்புடைய 20க்கும் மேற்பட்ட இடங்களில் சோதனை நடந்தது.

இடையம்பட்டியில் உள்ள கே.சி.வீரமணிக்குச் சொந்தமான திருமண மண்டபம் அவரது வீடு ஆகியவற்றிலும், திருப்பத்தூரில் உள்ள அவருக்குச் சொந்தமான நட்சத்திர ஹோட்டலிலும் தீவிர சோதனை நடந்ததாக லஞ்ச ஒழிப்புத் துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# உள்ளூராட்சிமன்ற தேர்தலை கண்காணிக்க மத்திய பொலிஸ் படையை அனுப்புக்கள்

## தேர்தல் ஆணையத்துக்கு எடப்பாடி பழனிச்சாமி மனு



சென்னை, செப். 17

9 மாவட்ட உள்ளாட்சி தேர்தலை நியாயமாக நடத்த மத்திய பொலிஸ் படையினரை அதிகளவில் நியமிக்க வேண்டும் என்று மாநில தேர்தல் ஆணையத்துக்கு எடப்பாடி பழனிசாமி மனு அனுப்பி உள்ளார்.

தமிழக சட்டமன்ற எதிர்க் கட்சி தலைவரும், அ.தி.மு.க. இணை ஒருங்கிணைப்பாளருமான எடப்பாடி பழனிசாமி, தமிழ்நாடு மாநில தேர்தல் கமிஷனருக்கு ஒரு மனு அனுப்பி உள்ளார். அதில் கூறியிருப்பதாவது:-

காஞ்சீபுரம், செங்கல்பட்டு உள்பட 9 மாவட்டங்களில் அடுத்த மாதம் (ஒக்ரோபர்) 6 மற்றும் 9ஆம் திகதிகளில் ஊரக உள்ளாட்சி தேர்தல் நடைபெறும் என்று மாநில தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

234 சட்டமன்ற தொகுதிக்கும் ஒரேநேரத்தில் தேர்தல் நடத்தப்பட்ட நிலையில், வெறும் 9 மாவட்ட உள்ளாட்சி தேர்தலை 2 கட்டமாக நடத்துவது அவசியமற்றது. தேர்தலை 2 கட்டமாக நடத்துவதால் ஆளுங்கட்சியினர் சட்டவிரோத செயல்களில் ஈடுபட சாத்தியக்கூறுகள் உள்ளன. இந்த தேர்தலை நியாயமாக நடத்த மத்திய அரசு அதிகாரிகள் அல்லது வேறு மாநில அதிகாரிகளை பார்வையாளர்களாக நியமிக்க வேண்டும்.

கொரோனாவை கருத்தில் கொண்டு, பிரசாரத்தில் ஈடுபடும் நட்சத்திர பேச்சாளர்களின் எண்ணிக்கையை குறைக்க வேண்டும். பிரசாரத்தில் ஈடுபடும் நாட்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்தி இணையதளம் வாயிலாக பிரசாரம் மேற்கொள்வதை ஊக்கப்படுத்த வேண்டும்.

மாநில பொலிஸார், அரசு அலுவலர்கள் ஆளும்கட்சிக்கு ஆதரவாக செயல்படுவார்கள் என்பதால் மத்திய ரிசர்வ் பொலிஸ் படை, மத்திய தொழில் பாதுகாப்பு படையினரை அதிக அளவில் தேர்தல் பணியில் ஈடுபடுத்த வேண்டும்.”

# ஒக்ரோபர் முதல் வாரம் வரை ஊரடங்கை நீடிக்கவேண்டும்

## மருத்துவ வல்லுநர்கள் சங்கம் கோரிக்கை

கொழும்பு, செப். 17

**கொவிட்-19 தொற்றுநோயைப் பொறுத்தவரை இலங்கை இன்னும் அதிக ஆபத்துள்ள நாடுகளில் (சிவப்புப் பட்டியல்) ஒன்றாக இருப்பதால், தனிமைப்படுத்தல் ஊரடங்கு நடைமுறையை ஒக்ரோபர் மாத முதல் வாரம்வரை மேலும் நீடிக்க அரசு மற்றும் முடிவெடுப்பவர்களுக்கு மருத்துவ வல்லுநர்கள் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.**

இது தொடர்பில் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: -

இலங்கை தற்போதைய 'சிவப்பு வலயத்தில்' இருந்து 'பசுமை வலயத்து' விரைவாக நிலையான முறையில் செல்ல வேண்டும்.

இலங்கை தற்போதைய கட்டுப்பாடுகளை தளர்த்தி னால், நோய் தீவிரமடைந்து பரவுவதற்கான அதிக வாய்ப்பு உள்ளது.

இதன் விளைவாக வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுவது திடீரென உயர்ந்து, அதிக எண்ணிக்கையிலான நோயாளிகளைச் சமாளிக்க முடியாமல் சுகாதார வசதிகள் இருக்கும்.

இது துரதிர்ஷ்டவசமாக இறப்பு விகிதத்தை அதிகரிக்க லாம்.

சினோபார்ம் தடுப்பூசி தங்களுக்கு கிடைக்கும் தரவுகளின் அடிப்படையில் சிறந்த நோய் எதிர்ப்பு சக்தியை அளிக்கிறது. காலத்தின் தேவைக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில், 20-30 வயதுடைய இளைஞர்களின் மனநிலையை பயனுள்ள கல்வியோடு மாற்றவேண்டும்.

சினோபார்ம் தடுப்பூசியை விரைவாகப் பெறுவதற்கு, இலங்கையை கொவிட்-19 இல்லாத நாடாக மாற்ற வேண்டும் - என்றுள்ளது.



# வரணியில் குண்டுகள் மீட்பு!

யாழ்ப்பாணம், செப். 17

வரணி குடமியன் பகுதியில் இரண்டு வெடிகுண்டுகள் காணப்பட்டுள்ளமை தொடர்பில் பொலிஸாராலும் படையினராலும் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அந்த பகுதியில் தனியார் தோட்டக் காணி ஒன்றில் துரவுக்கு அருகே இரண்டு மர்மப் பொருள்கள் இருப்பதாக நேற்று முன் தினம் மாலை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

இந்நிலையில் அங்கு சென்ற பொலிஸார் அதனைப் பார்வையிட்டதுடன் குண்டு செயலிழக்கவைக்கும் படையினருக்கு தகவல் வழங்கினர்.

அந்த வெடிபொருளின் மேலாக கப்டன் பவான் (ஐயா) 99 தகர்ப்பு வெடி மருந்து எனப் பெயரிடப்பட்டுள்ளது. இருந்த போதிலும் அதில் சில எழுத்துக்கள் அழிவடைந்து காணப்படுகின்றமையால் முழுமையாக வாசித்து அறிய முடியவில்லை.

அவை தமிழீழ விடுதலைப் புலிகளின் பாவனையில் இருந்தவையாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

# பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் தாதியர் விடுதிக்கு அடிக்கல் நடும் நிகழ்வு

யாழ்ப்பாணம், செப். 17

பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையின் தாதியர் விடுதிக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை பதில் அத்தியட்சகர் வே.கமலநாதன் தலைமையில் நேற்று முற்பகல் 11:00 மணிக்கு இடம் பெற்றது.

அடிக்கல் நாட்டுவதற்கான கிரியைகளை ஆதார வைத்தியசாலை ஆலயக் குரு சி.இந்திரராஜகுருக்கள் மேற்கொண்டார்.

தொடர்ந்து அடிக்கல்களை வைத்தியசாலையின் பதில் அத்தியட்சகர் வே.கமலநாதன், நிர்வாக உத்தியோகத்தர் வான்மதி ஜெயதாஸ், தாதிய பரிபாலகி குமுதமலர் ரவீந்திரன், மற்றும் மருத்துவர்கள், தாதியர்கள் என பலரும் நாட்டி வைத்தனர். 60 மில்லியன் ரூபா செல வில் இத் திட்டம் இடம் பெற வுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)



# இலங்கை முழுக்க சேகரிக்கப்பட்ட 150 மாதிரிகளில் 148 இல் டெல்டா!

கொழும்பு, செப். 17

இலங்கை முழுவதும் ஆகஸ்ட் இறுதி வாரம் முதல் செப்ரெம்பர் முதல் வாரம் வரை சேகரிக்கப்பட்ட 150 மாதிரிகளில் 148 டெல்டா வைரஸ் திரிபைக் (டீ.1.617.2) கொண்டுள்ளமை பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டது.

இரண்டு மாதிரிகள் மட்டுமே அல்பா (பி. 1.1.7) திரிபைக் கொண்டிருந்தன.

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் நோயெதிர்ப்பு மற்றும் மூலக்கூறு மருத்துவத் துறை மேற்கொண்ட ஆய்வில் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

பேராசிரியர் நீலிகா மாளவிகே மற்றும் மருத்துவர் சந்திம ஜீவந்தர உள்ளிட்ட பல்கலைக் கழக ஆராய்ச்சியாளர்களால் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

# இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் அனுராதபுரம் சிறைக்கு சென்று நேரில் ஆராய்வு

கொழும்பு, செப். 17

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு நேற்று முன்தினம் அனுராதபுரம் சிறைச்சாலைக்குச் சென்றது.

ஆணைக்குழுவின் மூன்று பிராந்திய ஒருங்கிணைப்பு அதிகாரிகள் நேற்று முன்தினம் அனுராதபுரம் சிறைச்சாலைக்கு சென்று பூர்வாங்க விசாரணை நடத்தினர்.

இந்தப் பயணத்தின்போது, மனித உரிமைகள் ஆணைக்குழுவினர், அனுராதபுரம் சிறைவளாகத்தில் கைதிகள் மற்றும் சிறைச்சாலை உத்தியோகத்தர்களுடன் விவாதித்தனர்.

"கைதிகள் மற்றும் சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கு இரண்டு வெவ்வேறு விடயங்கள் இருந்தன. லொஹான் ரத்வத்த சம்பந்தப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் நடந்ததாக கைதிகள் தெரிவித்தனர். அதே சமயம், இராஜாங்க அமைச்சர் வளாகத்துக்கு வந்தவுடன் அவருக்கு பாதுகாப்பு வழங்குவதாக சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் சொன்னார்கள் "என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் கலாநிதி நிமல் கருணாசிறி தெரிவித்தார்.

இந்த சம்பவம் நடந்ததை சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் மறுக்கிறார்களா என்று வினவியபோது, "இராஜாங்க அமைச்சருக்கு பாதுகாப்பு நெறிமுறைகள் இருப்பதை உறுதிசெய்து சிறையைச் சுற்றி காவல் போடப்பட்டதால், குற்றம் சாட்டப்பட்ட சம்பவத்தை பார்க்கவில்லை" என்று சிறைச்சாலை அதிகாரிகள் கூறினார்.

லொஹான் ரத்வத்த உட்பட சம்பவம் தொடர்பான அனைத்து தரப்பினரிடமும் வாக்குமூலம் பதிவு செய்யப்படும் வரை ஒரு முடிவை எடுக்க முடியாது என்று ஆணையாளர் கலாநிதி நிமல் கருணாசிறி கூறினார்.

இந்த விடயத்தை உன்னிப்பாக கவனித்து வருவதாகவும், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சேகரித்த தகவல்கள் மேலதிக விசாரணைகளுக்காக அந்தந்த அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படும் என்றும் ஆணையாளர் குறிப் பிட்டார்.



வன்னி ஹோப் அவுஸ்திரேலியா, மலையக சமூக அபிவிருத்தி நிறுவனம், காந்தி இல்லம், நியூசிலாந்து தமிழ் நிதியம் ஆகியன கூட்டாக இணைந்து சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள ஜே/131, ஜே/132 கிராம சேவகர் பிரிவின் கீழ் வசிக்கின்ற பெண் தலைமைத்துவ , மாற்றுத்திறனாளிகள், தொழில் இழந்த, வருமானம் குறைந்த 100 குடும்பங்களுக்கு ஒரு வாரகாலத்திற்குரிய உலர் உணவு பொதிகள் வழங்கிவைக்கப்பட்டன.

# யானையின் சடலம் வவுனியாவில் மீட்பு!

வவுனியா, செப். 17

வவுனியா ஓமந்தை, மாளிகை பகுதியில் யானையின் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

அந்தப் பகுதியில் யானையின் சடலம் ஒன்றை அவதானித்த பொதுமக்கள் அது தொடர்பாக பொலிஸாருக்கும்,வன ஜீவராசிகள் திணைக்களத்துக்கும் தகவல் வழங்கினர்.

சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார் மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களத்தினர் யானையின் சடலத்தை மீட்டதுடன் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# பெண்கள் வலுவூட்டல் திட்டத்துக்காக அமெரிக்கா 40 மில்லியன் டொலர் உதவி

கொழும்பு, செப். 17

கொழும்பு - இலங்கையின் சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள்துறைக்கு ஊக்கமளிப்பதற்கும், பெண் தொழில் முனைவோருக்கு உதவி செய்வதற்கும், அமெரிக்கா எஸ்.டி.பி வங்கிக்கு 40 மில்லியன் டொலர் நிதியளிப்பை நேற்று வழங்கியது.

இக்கடன் தொகையானது, சர்வதேச முதலீடு மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காக, எஸ்.டி.பி வங்கி, டி.எவ்.சி.சி வங்கி மற்றும் என்.டி.பி வங்கி உள்ளிட்ட இலங்கை வங்கிகளுக்கு அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் வழங்கும் 265 மில்லியன் டொலர் நிதியின் ஒரு பகுதியாகும்.

எஸ்.டி.பி வங்கியானது, இலங்கை முழுவதுமுள்ள சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கு ரூ. 500,000 முதல் ரூ. 1 மில்லியன் வரையான 1,400 இற்கும் அதிகமான கடன்களை வழங்க இந்த 40 மில்லியன் அமெரிக்க டொலர்களைப் பயன்படுத்தும்.

# உள்ளக பிரச்னைகளை தீர்ப்பதற்கு வெளியக பொறிமுறை அவசியமற்றது

## வெளியுறவு அமைச்சின் செயலர் கூறுகிறார்



கொழும்பு, செப்.17

**நாட்டின் உள்ளகப் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு, வெளிப்புறப் பொறிமுறையொன்றின் தேவை ஒருபோதும் இல்லையென, வெளி நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் அட்மிரல் ஜயநாத் கொலம்பகே தெரிவித்தார்.**

அதேபோன்று, அவ்வாறான பொறிமுறை ஒன்றைத் தயாரிப்பதற்கு, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு அதிகாரம் வழங்கப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டிய அவர், இலங்கையின் உள்ளக சட்டக் கட்டமைப்பின் கீழ், நாட்டின் அனைத்துப் பிரச்னைகளுக்கும் தீர்வு வழங்கப்படும் என்றார்.

ஜனாதிபதி ஊடக மையத்தால் ஏற்பாடு செய்யப்படும் ஊடகச் சந்திப்பு, நேற்று வியாழக்கிழமை முற்பகல், மெய்நிகர் தொழில்நுட்பத்தின் ஊடாக நடத்தப்பட்டபோது, அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

“ஜெனிவா குற்றச்சாட்டுகள், ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தொடர் மற்றும் இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை” எனும் தலைப்புகளின் கீழ், நேற்றைய ஊடகச் சந்திப்பு இடம்பெற்றது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் இம்முறை கூட்டத்தொடரின் போது, அதன் ஆணையாளர் நாயகம் மிச்செல் பச்சலெட் அம்மையாரால் முன்வைக்கப்பட்ட வாய்மொழி அறிக்கையின்போது, காணாமல் போனோருக்கு நட்டஈடு வழங்கல், தமிழ் சிறைக் கைதிகளை விடுவித்தல், பயங்கரவாத ஒழிப்புச் சட்டத்தைத் திருத்தல் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் முன்னெடுத்த நடவடிக்கைகளுக்குப் பாராட்டுகளைத் தெரிவித்திருந்தமை மகிழ்ச்சிக்குரியதென்று, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் குறிப் பிட்டார்.

மனித உரிமைகளுக்குள் மறைந்திருந்து, இலங்கையின் உள்ளக விடயங்களில் தலையீடு செய்வதை, சீனா, ரஷ்யா, ஜப்பான், வடகொரியா, தென்கொரியா, பாகிஸ்தான், ஈராக், வெனிசியூலா உள்ளிட்ட 15 நாடுகள் எதிர்த்து, இலங்கையுடன் கைகோர்த்து நின்றன.

மனித உரிமைகளைப் பாதுகாத்தல், நல்லிணக்கத்தைப் பின்பற்றல், பயங்கரவாதத்தை ஒழித்தல் போன்ற விடயங்களில் அரசாங்கம் கொண்டுள்ள பொறுப்புணர்வு, அவர்களின் விசேட பாராட்டுக்கு இலக்காகியுள்ளன என்றும், அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

வலயத்திலுள்ள ஏனைய நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து, இலங்கையானது அமைதியான நாடாக விளங்குகிறது.

பயங்கரவாதத்தை ஒழித்தல், அடிப்படைவாதத்தைப் பரப்பும் தீவிரவாதத்தை ஒழித்தல் போன்றே, நாட்டு மக்களிடையே சமாதானம் மற்றும் இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையானது, சீரமைக்கப்பட்ட கொள்கையாகும் என்று எடுத்துரைத்த வெளிநாட்டு அலுவல்கள் செயலாளர், அந்தக் கொள்கையின் அடிப்படையில் செயல்பட்டு, அதிகாரப் போட்டிகளில் சிக்கிக் கொள்ளாது முன்னோக்கி நகர்வதே இலங்கையின் நோக்கமென்றும் இதன்போது, இந்நாட்டின் அமைவிடம் தொடர்பில் அதிக அவதானத்துடன் அரசாங்கம் செயல்பட்டு வருகின்றது என்றும் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையை எதிர்கொள்வதற்கான இலங்கையின் தயார்ப்படுத்தல்கள் குறித்து ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்த செயலாளர் ஜயநாத் கொலம் பகே,

அரசாங்கத்தின் கொள்கை மிகத் தெளிவாக இருக்கின்றது என்றும் அது தொடர்பில், உலகின் பல நாடுகளுக்கு, கடந்த மாதங்களில் பல்வேறு பட்ட அறிக்கைகள் ஊடாக அறிவிக்கப்பட்டுள்ளன என்றும், அவற்றின் பிரதிபலனாகவே, அந்நாடுகளின் ஒத்துழைப்பு இலங்கைக்கு தற்போது கிடைத்துள்ளது என்றும் குறிப்பிட்டார்.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, நீதி அமைச்சு மற்றும் பாதுகாப்பு அமைச்சு போன்றன, இது விடயத்தின் பாரிய ஒருங்கிணைப்புடன் செயலாற்றியிருந்தன என்றும் அவர் எடுத்துரைத்தார்.

“கொவிட் சவாலை வெற்றி கொள்வது மற்றும் எதிர்காலத் திட்டங்கள்” என்ற உள்ளடக்கத்துடனேயே, ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபைக் கூட்டத்தொடரில் இம்முறை பங்கேற்கவுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்ட அனைத்து நாடுகளினதும் அரச தலைவர்களதும் உரைகள் அமையவுள்ளன என்று, இந்த ஊடகச் சந்திப்பில் விசேட உரையாற்றிய ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க தெரிவித்தார்.

தத்தமது நாடுகளின் பொருளாதாரம் மற்றும் சமூக அபிவிருத்திகள் தொடர்பான இணக்கப்பாடுகளுடன், கொரோனா சவாலை வெற்றி கொள்வதற்கு, இம்முறை கூட் டத்தொடர் பாரிய சந்தர்ப்பத்தை வழங்குமென்றும், அவர் கூறினார்.

அதேவேளை, இலங்கை தொடர்பில் சர்வதேச ரீதியில் காணப்படும் பல்வேறு தவறான அபிப்பிராயங்களைச் சீர்செய்வதற்கும், இம்முறை ஐ.நா. கூட்டத்தொடரை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பயன்படுத்திக்கொள்வார் என்று தான் நம்பிக்கை கொண்டிருப்பதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.

# இந்த ஆண்டு இலங்கையில் 5 வீத பொருளாதார வளர்ச்சி

## மத்திய வங்கி ஆளுநர் தகவல்

கொழும்பு, செப். 17

தற்போதைய தடுப்பூசி செயல்பாடுகள் மற்றும் பயணக்கட்டுப்பாடுகள் தளர்வுக்கு பின்னர், இந்த வருடம் நாடு 5 சதவீத பொருளாதார வளர்ச்சியை அடையுமென மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.

ருவிட்டர் பதிவொன்றின் ஊடாக அவர் இந்த விடயத்தை தெரிவித்தார்.

2021ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் இலங்கை 8 சதவீத பொருளாதார வளர்ச்சியை எட்டியுள்ளதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது இது 12.3 சதவீத வளர்ச்சியாகும் எனவும் மத்திய வங்கி ஆளுநர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# சீனி இறக்குமதிக்கு அனுமதி

கொழும்பு, செப். 17

சீனி இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அத்தியாவசிய சேவைகளுக்கான ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் செனரத் நிவுன்ஹெல்ல தெரிவித்துள்ளார்.

சீனி இறக்குமதிக்கு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு நிதி அமைச்சினூடாக அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

சீனி இறக்குமதிக்கு ஏற்கனவே தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், புதிய அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இதனால் அதிக விலையில் சீனி விற்பனை செய்யப்பட்டமையால், சீனிக்கான கட்டுப்பாட்டு விலையும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தற்போது கையிருப்பிலுள்ள சீனி, எதிர்வரும் இரண்டரை மாதங்களுக்கான நுகர்விற்கு போதுமானது என கூட்டுறவு மற்றும் நுகர்வோர் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, 1,50,000 மெற்றிக் தொன் சீனி கையிருப்பில் உள்ளதாகவும் அவர் கூறினார்.

# கொரோனா தொற்றால் மருத்துவர் உயிரிழப்பு

கொழும்பு, செப். 17

கட்டுகஸ்தோட்டை வைத்தியசாலையில் பணியாற்றிய மருத்துவர் ஒருவர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளார்.

கட்டுகஸ்தோட்ட-மாவில்மட பகுதியில் வசிக்கும் மருத்துவர் ஜைத் ரஃபைதீன் என்பவரே உயிரிழந்துள்ளார்.

கொரோனா தொற்றுக்கு உள்ளான இவர் கடந்த ஓகஸ்ட் 18ஆம் திகதி பேராதனை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

அவர் கடந்த மூன்று வாரங்களாக தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், நேற்று முன்தினம் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்தார்.

அவரது உடல் நேற்று சுகாதார வழிமுறைகளுக்கு அமைவாக மட்டக்களப்பு-ஓட்டமாவடியில் அடக்கம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# புதையல் அகழ்வில் ஈடுபட்ட பிக்கு கைது

கொழும்பு, செப். 17

திருகோணமலை-கோமரங்கடவல-பபுருகஸ்ஹின்ன காட்டுப் பகுதியில் புதையல் அகழ்வில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் பௌத்த பிக்கு ஒருவரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் மொரவெவ-நாமல்வத்த கல்கந்த சயில பப்பதாராம விகாரையின் முன்னாள் விகாராதிபதி (வயது-49) என தெரியவருகிறது.

கைது செய்யப்பட்ட குறித்த பௌத்த பிக்குவை திருகோணமலை நீதிமன்றில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக கோமரங்கடவல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# ஐரோப்பிய ஒன்றிய குழு இலங்கைக்கு வருகின்றது

கொழும்பு, செப். 17

ஐரோப்பிய ஒன்றியத்தின் குழுவொன்று இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளது.

எதிர்வரும் 27ஆம் திகதி குறித்த குழு இலங்கையை வந்தடையவுள்ளதாக வெளியுறவு அமைச்சின் செயலாளர், பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகை தொடர்பில் கலந்துரையாடுவதற்காக குறித்த குழு இலங்கையை வந்தடையவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

# கைதியின் தலையில் கைத்துப்பாக்கியா? லொஹான் செய்தது வன்முறை செயல்

## சரத் பொன்சேகா எம்.பி விசனம்



கொழும்பு, செப். 17

ஓர் அப்பாவி கைதியின் கை கட்டப்பட்டு கைத்துப்பாக்கி தலையில் வைக்கப்பட்டால் அது பாரதூரமானது. அது ஒரு வன்முறைச் செயல். அந்த செயலில் ஈடுபட்ட லொஹான் ரத்வத்தவுக்கு எதிராக சட்டம் அமுல் படுத்தப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா,

கொரோனா தொற்றுநோயைக் கட்டுப்படுத்த அரசாங்கம் முடக்கத்தைச் செய்துள்ளது. ஆனால், வீதிகளில் வாகனங்களின் போக்குவரத்தை குறைந்த பட்சம் ஏனும் பரிசோதித்து மட்டுப் படுத்தும் எந்த அமைப்பும் இல்லை. என்றாலும் நேர்மறையான முடிவுகள் ஓரளவு உணரப்பட்டுள்ளன. இதற்கு பொதுமக்களின் அர்ப்பணிப்பு காரணமாகும் என்று நாங்கள் நினைக்கிறோம். முடக்கம் விரைவில் நீக்கப்படும். இது பொதுமக்களின் ஆர்வம் மற்றும் அர்ப்பணிப்பின் அடிப்படையில் செய்யப்படுவதாலேயே பிரதிபலனை எதிர்பார்க்க முடியும். இந்த முறையில் தான் நாம் இதில் வெற்றியை அடைய முடியும். அரசாங்கம் எடுக்கும் முடிவுகளை சரியான நேரத்தில் நிபுணர்களிடம் கேட்கிறார்களா என்ற பிரச்னை எங்களுக்கு உள்ளது. தம்மை தாமே பாதுகாத்துக் கொள்ளுமாறு அண்மையில் சுகாதார இராஜாங்க அமைச்சர் திருமதி சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார். நிலைமை இப்படி இருக்கிறது. இவ்வாறு பல நிபுணத்துவ மருத்துவர்கள், நிபுணர் குழுக்களை விட்டு வெளியேறியதை நாம் காண்கிறோம். அவர்கள் மிகவும் திறமை வாய்ந்த நிபுணர்கள். ஆனால், ரீ.வியில் மருத்துவர் ஹேமந்த ஹேரத்தை பார்க்கிறோம். இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்கு முன்பு அவர் கொரோனா இன்னும் சமூகமயமாக்கப்படவில்லை என்று கூறினார்.

அரசாங்கத்துக்கு துணைபோக தயாராக இருக்கும் வல்லுநர்கள் என்று அழைக்கப்படுபவர்களும் இங்கே இருப்பதை நாங்கள் காண்கிறோம். அவர்கள் கூறும்போது அவற்றைக் மக்கள் கேட்கும்போது புரிந்து கொள்ளவேண்டும்.

பைசர், அஸ்ட்ராசெனகா தடுப்பூசி ஆறு மாதங்களுக்குப் பிறகு வலிமையை இழக்கிறது என்பதுஉலகின் சில உயர் தர பல்கலைக்கழகங்களால் பரிசோதிக்கப்பட்டுள்ளது. எனவே, அறிவார்ந்த ஆட்சியாளர்கள் உள்ள நாடுகளில், மூன்றாவது தடுப்பூசி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. நாங்கள் இன்னும் அது பற்றி பேசுகிறோமே தவிர செயற்படாமல் இருக்கிறோம்.எனவே இந்த நாட்டின் அரசாங்கம் முன்கூட்டியே இது சார்ந்து திட்டமிட வேண்டும். இந்த அரசாங்கம் முன்கூட்டிய முடிவுகளை எடுக்காத போக்கு உள்ளது.

நமது பிரதமர் சமீபத்தில் இத்தாலிக்கு விஜயம் செய்துள்ளார். கடந்த காலத்தில், இத்தாலி நமது நாட்டுத் தலைவர்களை சிங்கக் கொடியால் அலங்கரித்து வரவேற்கப்பட்ட ஒரு நாடு. பல நாட்டுப்பற்றாளர்களைக் கொண்ட நாடு தான் இத்தாலி. ஆனால், இந்த நேரத்தில் பிரதமருக்கு எதிராக கூக்குரல் செய்வதை பார்த்தோம். சுமார் இருநூறு பேர் கறுப்புக் கொடி ஏந்திய வண்ணம் கூக்குரல் இட்டதை நாங்கள் பார்த்தோம். மற்றுமோர் இடத்தில் பிரதமரை வரவேற்று வாழ்த்துவதை பார்த்தேன். அவர்கள் தூதரக ஊழியர்களாக இருக்கலாம். நாம் இதைப் பற்றி பேச வேண்டும். ஈஸ்டர் தாக்குதல் பற்றி உலகக் கருத்தைக் கேட்க வேண்டும். உலகம் முழுவதும் இலங்கையர்கள் உள்ளனர்.இதன் மூலம் அவர்களின் நிலைப்பாட்டை நாம் அறியலாம்.

அம்பாறையில் வனவிலங்கு இராஜாங்க அமைச்சர் விமலவீர திஸாநாயக்கவுக்கு எதிராக மக்கள் கூக்குரல் செய்வதை நாங்கள் பார்த்தோம். வனவிலங்கு அமைச்சர் ஏன் நன்னீர் மீன்களை வளர்க்கிறாரா? அவர் வியாபாரம் செய்து கொண்டிருக்கலாம். அரசாங்கத்தின் சீரழிவால் நாங்கள் வருத்தப்படவில்லை. ஆனால் நாடு சீரழிவது குறித்து வருத்தப்படுகிறோம். மக்கள் மிகவும் கஷ்டப்பட்டு பாதுகாப்பற்ற வாழ்க்கையை அனுபவிக்க வேண்டியிருப்பதற்காக வருந்துகிறோம். மக்களை காப்பாற்ற எதிர்காலத்தில் தியாகங்களை செய்வோம்.

இந்த அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட மூத்த அரசாங்க அதிகாரிகள் மற்றும் நிபுணர்கள் அரசாங்கத்தின் விரக்தி காரணமாக இராஜினாமா செய்கிறார்கள். திறமையான நாட்டை நேசிப்பவர்கள் இந்த அரசாங்கத்துடன் இணைந்து செயல்பட முடியாது, அவர்களின் முடிவுகள் ஏற்றுக்கொள்ளப் படவில்லை என்று கூறுகிறார்கள். மேலும், மத்திய வங்கியின் ஆளுநர் லக்ஷமன் ஏமாற்றத்துடன் இராஜினாமா செய்ததை நாங்கள் பார்த்தோம். இந்த அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட மத்திய வங்கியின் ஆளுநர் மிகக் குறுகிய காலத்தில் இராஜினாமா செய்தார். அரசியல்வாதிகளுக்கு நாட்டை முன்னேற்ற விரும்பவில்லை என்று அவரால் கூறப்பட்டது. அவர் எதிர்க் கட்சியுடன் வேலை செய்யவில்லை. மாறாக அரசாங்கத்துடனயே வேலை செய்தார். அவர் அரசாங்கம் மற்றும் நாட்டை ஆளும் அரசியல்வாதிகளையே குறித்தார். நெல் சந்தைப்படுத்தல் அதிகார சபையின் தலைவர் இராஜினாமா செய்ததையும் பார்த்தோம். அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட அனுபவம் வாய்ந்த மற்றும் அறிவுள்ள ஒரு மனிதர்.அவர் அவர் அளித்த தீர்வுகளை, ஆலோசனையை ஏற்கும் ஞானம் நிர்வாகத்திற்கு இல்லை என்று இராஜினாமா செய்தபோது கூறினார்.

அவருக்கு மேலே உள்ள அரசியல்வாதிகள்,விவசாய அமைச்சர் உட்பட நாட்டை ஆள்பவர்கள் மீதே விரல் நீட்டுகிறார்கள். இது ஒரு சோகமான நிலை. இந்த முறையில் மக்கள் மட்டுமின்றி அவர்களுக்கு நெருக்கமான அறிஞர்களும் இந்த அரசை கொண்டுவர தியாகம் செய்த அறிஞர்களும் அரசாங்கத்தின் மீது விரக்தி அடைந்து தங்கள் பதவிகளை மிகுந்த வருத்தத்துடன் விட்டுச் செல்கின்றனர்.

இந்த அரசாங்கத்தின் அமைச்சர்கள் மற்றும் எம்.பிக்கள் நாட்டை கட்டியெழுப்ப நியமிக்கப்படவில்லை. குடிகாரர்கள் மற்றும் போதைக்கு அடிமையானவர்கள் அங்கும் இங்குமாகச் சென்று, தங்கள் கைத்துப்பாக்கியை வெளியே இழுத்து, குதித்தனர். அமைச்சர் லொஹான் ரத்வத்த என்ற அமைச்சரின் நடத்தையைப் பார்த்தோம்.அவருடைய தந்தை எங்களுடன் பணியாற்றியவர். ஆனால், அந்த நபர் தனது தந்தையை மதிக்காமல், அப்பாவி கைதிகளை முழங்காலிட்டு கைத்துப்பாக்கியுடன் சென்றிருக்கிறார். எவ்வளவு கொடூரமாக செயல்பட்டிருக்கிறார். சண்டியர்கள் அல்ல மதுபோதையில் சென்று கைதிகளிடம் நாடகமாடுகிறார்கள். நானும் சிறைகளில் இருந்தேன். அங்குள்ள துக்க துயரம் எனக்குத் தெரியும். இதுபோன்ற நபர்கள் வந்தால், அவர்களை சகலரும் ஒன்றிணைந்து எலும்புகளை நசுக்கி வெளியேற்ற வேண்டும் என்று நான் கைதிகளிடம் கூறுகிறேன். கைதிகளுக்காக மக்கள் இவ்வாறான சந்தர்ப்பங்களில் முன் நிற்பார்கள். இதுபோன்ற முட்டாள்தனமான செயல்களைச் செய்யும் மக்களை நீங்கள் ஒருபோதும் மன்னிக்கக்கூடாது. அரசாங்கம் அவரை சிறைச்சாலைகள் அமைச்சர் பதவியிலிருந்து மட்டும் நீக்கியுள்ளது. அவரிடம் இன்னுமோர் அமைச்சு உள்ளது. இவர்களுக்கு எதிராக பல முறைப்பாடுகள் உள்ளன. சண்டியர்களை வைத்துக் கொண்டு மாணிக்க அகழ்வுகளில் ஈடுபடுகின்றனர்.

அவர்கள் மீது அரசாங்கம் எடுத்த சட்ட நடவடிக்கை பற்றி நாம் தெரிந்து கொள்ள வேண்டும். கைதியின் கைத்துப்பாக்கியால் தாக்கப்பட்டால், அந்தஸ்தைப் பொருட்படுத்தாமல் அவர் தண்டிக்கப்பட வேண்டும். இந்த நபருக்கு எதிராக அரசாங்கம் எடுக்கும் சட்ட முடிவுகளை நாங்கள் அறிய விரும்புகிறோம்.

ஒரு நபருக்கு தற்காப்புக்காக மட்டுமே கைத்துப்பாக்கி வழங்கப்படுகிறது. ஓர் அப்பாவி கைதியின் தலையில் கை கட்டப்பட்டு கைத்துப்பாக்கி தலையில் வைக்கப்பட்டால் அது பாரதூரமானது, அது ஒரு வன்முறைச் செயல். அந்த நபருக்கு எதிராக சட்டம் அமல் படுத்தப்பட வேண்டும். அந்த ஒரு நபரின் கோழைத்தனத்திற்காக தமிழ் அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள் இதன் மூலம் இனவெறியின் உருவமாக இதை வர்ணிக்க முயற்சிக்க வேண்டாம். தற்போது இந்த நபருக்கு எந்த தண்டனையும் வழங்கப்படாமல் கண்துடைப்பே மேற்கொள்ளப்பட்டுள்ளது.அவரின் நாற்காலி இன்னும் அப்படியே உள்ளது.

அப்படி ஒரு விடயம் தெரிவிக்கப்படவில்லை என்று சிறைச்சாலை ஆணையாளர் கூறுவதை நாங்கள் பார்த்தோம். ஆடைகளை அணிந்து கொண்டா இவ்வாறு கூறுகிறார் என்று வினவுகிறோம். ஒவ்வொரு கைதியின் பாதுகாப்பையும் அங்கீகரிப்பது மற்றும் மனித உரிமைகள் பற்றியதும் முக்கியமல்லவா என்று நாங்கள் அவரிடம் கேட்கிறோம். சிறைக்கைதிகளின் உரிமைகளை பாதுகாப்பவர்களே இவ்வாறு கூறுகின்றனர். அது எப்படி நடந்தது?-என்றார். (அ)

# மஹிந்தவை விமர்சித்து இத்தாலியில் சுவரொட்டி

## அந்நாட்டு அரசிடம் இலங்கை முறைப்பாடு

கொழும்பு, செப். 17

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இத்தாலிக்கு விஜயமொன்றை மேற்கொண்டிருந்தபோது ,அவர் தங்கியிருந்த பகுதியில் அவருக்கு எதிரான சுவரொட்டி கள் ஒட்டப்பட்டமை குறித்து இத்தாலியிலுள்ள இலங்கைத் தூதரகம் இத்தாலிய அரசிடம் முறைப்பாடொன்றை செய்துள்ளது.

நாட்டின் தலைவர் ஒருவருக்கு எதிரான இவ்வாறான செயல்பாடு குறித்து விசாரணைகளை நடத்துமாறு இலங்கை தூதரகம், அமைச்சிடம் கேட்டுள்ளதாக மேலும் அறியமுடிந்தது.

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்கள் குறித்து இலங்கை அரசு முறையான விசாரணை களை நடத்தவில்லையென தெரிவித்து இத்தாலியிலுள்ள இலங்கையர்கள் முன்னதாக பிரதமர் தங்கியிருந்த பகுதியில் ஆர்ப்பாட்டம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.




# கொடிகாமம் இளைஞர் விபத்தில் மரணம் கொலை என்ற கோணத்தில் விசாரணை!

யாழ்ப்பாணம், செப். 17

கொடிகாமம் காரைக்காட்டு வீதியில் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் உயிரிழந்த சம்பவம் திட்டமிட்ட கொலை என்று இளைஞரின் குடும்பத்தாரால் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 14ஆம் திகதி இரவு கொடிகாமம், கோயிலாமனைப் பகுதியைச் சேர்ந்த இராசேந்திரன் நவர்ணன் (வயது 24) என்ற இளைஞர் அதிவேகமாக மோட்டார் சைக்கிளில் சென்று மின் கம்பத்துடன் மோதி படுகாயம் அடைந்த நிலையில் வைத்தியசாலையில் உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இருந்தபோதிலும், குறித்த இளைஞரின் மரணத்தில் சந்தேகம் இருப்பதாக அவரது பெற்றோரால் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

சம்பவத்தை அடுத்து சாவகச்சேரி நீதிமன்றத்துக்கு வழக்கு பாரப்படுத்தப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் விசாரணை மேற்கொண்ட நீதிபதி, யாழ்ப்பாணத்தில் உள்ள மரண விசாரணை நிபுணர் ஒருவரின் ஊடாக மரணம் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டுள்ளார்.

# பதவி விலகவைத்து பொறுப்புக்கூறும் தோற்றப்பாட்டை காண்பிக்க முயற்சி?

வடமத்திய மாகாணம் அநுராதபுரம் சிறைச்சாலையில் குடிபோதையில் சென்ற இராஜாங்க அமைச்சர் லொகான் ரத்வத்த தமிழ் அரசியல் கைதிகளை முழந்தாளிடச் செய்து, துப்பாக்கி முனையில் கைதிகளுக்கு உயிர் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பாக பல்வேறு அரசியல் கட்சிகளும் பொது அமைப்புகளும் கண்டனங்களைத் தெரிவித்துள்ளன. அமைச்சர் லொகான் ரத்வத்தயைக் கைது செய்ய வேண்டுமெனவும் கோரியுள்ளன. ஜெனிவா மனித உரிமைகள் சபை அமர்வு 13 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பித்துள்ள நிலையில், 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தையடுத்து சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சர் லொகான் ரத்வத்த தனது பதவியிலிருந்து விலகவுள்ளாரென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கூறியுள்ளார்.

ஆனாலும் அமைச்சரை உடனடியாகப் பதவியில் இருந்து விலக்குமாறும் அவருடைய அமைச்சுப் பொறுப்புக்களுக்குரிய கடமைகளை அமைச்சின் செயலாளரிடம் கையளிக்குமாறும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளதாக பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

அதிகாரபூர்வ பயணம் ஒன்றை மேற்கொண்டு இத்தாலிக்குச் சென்றிருந்த மஹிந்த ராஜபக்ஷ அங்கிருந்தே இந்த உத்தரவைப் பிறப்பித்ததாக கொழும்பில் உள்ள பிரதமர் செயலகம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையிலேயே அநுராதபுரம் சிறைச்சாலைகளில் இடம்பெற்ற சம்பவங்களுக்குப் பொறுப்பேற்றுத் தான் பதவி விலகுவதாக இராஜாங்க அமைச்சர் லொகான் ரத்வத்த ஜனாதிபதிக்கு கடிதம் மூலம் அறிவித்திருந்ததாகவும் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பாக கொழும்பில் இருந்து வெளிவரும் சிங்கள, ஆங்கில நாளேடுகள் முக்கியத்துவம் கொடுத்துள்ளன. குறிப்பாக அமைச்சர் லொகான் ரத்வத்தைக்கு எதிராக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மேற்கொண்ட நடவடிக்கைகள் அமைச்சருடைய பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஏற்றுக் கொண்ட விடயங்கள் பற்றிய செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளன.

அத்துடன் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உட்பட பல சிங்கள அரசியல் கட்சிகள் கண்டித்த செய்திகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளன. தமிழரசுக் கட்சியை மையப்படுத்திய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகிய கட்சிகள் கண்டித்ததுடன் அமைச்சர் லொகான் ரத்வத்த கைது செய்யப்பட வேண்டுமென விடுத்த வேண்டுகோள் தொடர்பான செய்திகளுக்கும் ஆங்கில செய்தி இணையத் தளங்கள் முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளன.

வழமையாக தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பான தாக்குதல்கள் மற்றும் அவர்களுடைய உண்ணாவிரதப் போராட்டங்கள் தொடர்பான செய்திகளை சிங்கள, ஆங்கில ஊடகங்கள், நாளேடுகள் பிரசுரிப்பதேயில்லை.

இந்தவொரு நிலையில், இந்தச் செய்திக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டமை தொடர்பாக தமிழ் அரசியல் வட்டாரங்களில் சந்தேகம் எழுந்துள்ளன. அதாவது அமைச்சர் லொகான் ரத்வத்தவைப் பதவியில் இருந்து விலகுமாறு பிரதமர் கேட்டுக் கொண்டதன் மூலம் அரசாங்கம் உடனுக்குடன் பொறுப்புக்கூறுகின்றது என்றவொரு தோற்றப்பாட்டை ஜெனிவா மனித உரிமைச் சபைக்கு வெளிப்படுத்தும் நோக்கில் தமிழ் அரசியல் கைதிகள் மீது திட்டமிடப்பட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாமென்ற சந்தேகங்கள் எழுந்துள்ளன.


ரத்வத்த அமைச்சராகப் பதவியேற்ற போது: (கோப்புப் படம்)

**அமைச்சர் லொகான் ரத்வத்த குறித்த அமைச்சுப் பொறுப்பில் இருந்து விலகினாலும், இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அமைச்சுப் பொறுப்பில் இருந்து விலகவில்லையென கொழும்பில் உள்ள சிங்கள ஊடகவியலாளர்கள் கூறுகின்றனர்.**

ஏனெனில் தற்போது ஐ.நா மனித உரிமைச் சபை அமர்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சென்ற 13 ஆம் திகதி ஆணையாளர் மிச்செல் பச்லெட் இலங்கை குறித்த வாய்மொழிமூல அறிக்கையை வெளியிட்டிருந்தார்.

ஐ.நாவுடன் இணைந்து பொறுப்புக்கூறல் விடயத்தில் ஒத்துழைக்கவுள்ளதாகக் கடந்த ஜூன் மாதம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வழங்கிய உறுதிமொழியை ஆணையாளர் மிச்செல் பச்சலெற் தனது அறிக்கையில் பாராட்டியுமிருந்தார். அத்துடன் வெளியுறவு அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் கையளித்த 13 பக்க அறிக்கையில் உள்ளகப் பொறிமுறையே பரிந்துரைக்கப்பட்டுமிருந்தது.

ஆகவே, அந்தப் பொறுப்புக்கூறலை மேலும் உறுதிப்படுத்தி இலங்கை அரசின் நீதித்துறை மூலமாக உள்ளகப் பொறிமுறையைச் செயற்படுத்த மனித உரிமைச் சபையை இணங்க வைக்கும் ஒரு தந்திரோபாயமாக இந்தச் சம்பவம் திட்டமிடப்பட்டிருக்கலாமெனக் கருதப்படுகின்றது.

அதேவேளை, ஐக்கிய நாடுகள் சபையின் கொழும்பில் உள்ள இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி கணா சிங்கர் உடனடியாகவே கண்டனம் வெளியிட்டுள்ளார்.

வழமைக்குமாறாக தமிழ் அரசியல் கைதிகள் தாக்கப்படும் செய்திகளைக் கொழும்பில் உள்ள ஐ.நா. அலுவலகமோ அல்லது வெளிநாட்டுத் தூதரகங்களோ கண்டுகொள்ளாத நிலையில், இந்தச் சம்பவம் உடனடியாகவே ஐ.நாவின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டமைக்கு ஆங்கிலச் செய்தி ஊடகங்களே காரணமாக அமைந்துள்ளன என்பது வெளிப்படை.

ஆகவே, இதன் பின்னணியில் இந்த சம்பவம் திட்டமிடப்பட்டிருக்கின்றது என்ற சந்தேகம் எழுவதோடு, அமைச்சர் லொகான் ரத்வத்தவைக்கு எதிராக அரசாங்கம் உடனடியாக மேற்கொண்ட குறைந்தபட்ச நடவடிக்கைகள் ஜெனிவா மனித உரிமைச் சபைக்குப் போதுமானவை என்ற கருத்தும் அரசாங்கத் திடம் இருக்கலாம்.

ஏனெனில், பெயர்பலகைகூட நாட்டப்படாமலும், யாருக்குமே தெரியாமலும் அவசர அவசரமாகக் கிளிநொச்சியில் திறக்கப்பட்ட காணாமல் ஆக்கப்பட்டோரைக் கண்டறியும் அலுவலகம் பற்றி ஆணையாளர் மிச்செல் பச்சலெற் தனது அறிக்கையில் பாராட்டியுள்ளார். அத்துடன் அந்த அலுவலகம் நல்லெண்ண முயற்சியெனவும் புகழாரம் சூட்டியிருக்கிறார்.

இவ்வாறானதொரு நிலையில் தமிழ் அரசியல் கைதிகளுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுத்த அமைச்சர் லொகான் ரத்வத்தயைப் பதவியில் இருந்து விலகுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கேட்டுக் கொண்டதையும் அமைச்சருடைய பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஏற்றுக் கொண்டதையும் நிச்சயமாக ஆணையாளர் பாராட்டுவார்.

ஜெனிவா அமர்வின் முடிவில் இந்தப் பாராட்டு வெளிவரலாம் அல்லது இலங்கையின் நல்லதொரு முன்னேற்றமாக ஆணையாளரினால் குறிப்பெடுத்துக் கொள்ளப்படலாம்.

அதேவேளை, ஜெனிவா அமர்வு நடைபெற்றுக் கொண்டிருப்பதால், தமிழ் அரசியல் கைதிகள் சிலரை விடுதலை செய்யும் நோக்கிலேயே, அமைச்சர் லொகான் ரத்வத்தயை அரசாங்கம் அங்கு அனுப்பியதாகவும், ஆனால் அமைச்சர் மதுபோதையில் இருந்ததால் கைதிகளுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுத்து அரசாங்கத்தின் திட்டத்தைக் குழப்பிவிட்டாரெனவும் கொழும்பில் உள்ள சிங்கள ஊடக வட்டாரங்கள் கூறுகின்றன.

ஆகவே எது எப்படி நடந்தாலும், ராஜபக்ஷ அரசாங்கத்தைப் பொறுத்தவரை அமைச்சர் லெகான் ரத்வத்தைய அமைச்சர் பதவியில் இருந்து விலகவைத்ததன் மூலம் பொறுப்புக்கூறல் தொடர்பான ஆரம்ப முயற்சியாக ஜெனிவா மனித உரிமைச் சபையின் ஆணையாளரை நம்பவைத்துவிட்டனர் என்ற முடிவுக்கு வரலாம். இதற்காகத் தமிழ் அரசியல் கைதிகளின் பெறுமதிமிக்க உயிரைத் துணிவோடு பணயம் வைத்துள்ளார்கள்.

இன அழிப்பு மற்றும் அரசியல் விடுதலைக்கான பேச்சுக்கள் உள்ளிட்ட அனைத்து விவகாரங்களுமே ஆணையாளர் மிச்செல் பச்சலெறின் வாய்மொழி மூல அறிக்கையில் திசை திருப்பப்பட்டிருந்தன. போர்க்குற்ற விசாரணை என்று ஜெனிவா மனித உரிமைச் சபையின் மொழியில் சொல்லப்படும் விசாரணைக்கான கலப்புப் பொறிமுறை பற்றிய பேச்சுக்கூட அந்த அறிக்கையில் உருப்படியாக இல்லை.

ஏனெனில், அந்தப் போர்க்குற்ற விசாரணையைத்தான் உள்ளக விசாரணையாக மாற்றியமைக்க இலங்கை அரசு 2015 ஆம் ஆண்டில் இருந்து நடத்தும் நாடகங்களை ஜெனிவா நம்புகின்றது.

அத்துடன் ஜெனிவாவுக்கும் இந்தியா, பிரித்தானியா மற்றும் அமெரிக்கா போன்ற மேற்குலக நாடுகளின் புவிசார் அரசியலுக்கு ஏற்பச் செயற்பட வேண்டிய சூழல் இருப்பதால், சிங்கள ஆட்சியாளர்களைத் திருப்திப்படுத்தும் அறிக்கைகளை வெளியிடுகின்றது.

இலங்கை சர்வதேசத்தை ஏமாற்றுகின்றது எனக் கூறினாலும் வல்லாதிக்க நாடுகளே ஈழத் தமிழர்களை அதிகமாக ஏமாற்றுகின்றன. அதற்காகவே தமிழ் அரசியல் பிரதிநிதிகள் சிலரையும் சில புலம்பெயர் அமைப்புகளையும் அந்த வல்லாதிக்கச் சக்திகள் விலைபேசியுமுள்ளன.

இதேவேளை, அமைச்சர் லொகான் ரத்வத்தை குறித்த அமைச்சுப் பொறுப்பில் இருந்து விலகினாலும், இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அமைச்சுப் பொறுப்பில் இருந்து விலகவில்லையென கொழும்பில் உள்ள சிங்கள ஊடகவியலாளர்கள் கூறுகின்றனர்.

அதேவேளை. அமைச்சர் லொகான் ரத்வத்தையைக் கைது செய்ய முடியாதெனவும் அவருக்கு எதிராக இதுவரை கைதிகளின் உறவினர்களிடம் இருந்தோ அல்லது அனுராதபுரம் சிறைச்சாலை அதிகாரிகளிடம் இருந்தோ எந்தவொரு முறைப்பாடுகளும் கிடைக்கவில்லையெனவும் இலங்கைப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிகால் தல்துவ கொழும்பில் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

- கூர்மை





> இந்த மூன்று நாடுகளும் இயற்கையான கூட்டாளிகள் என்றும், இந்தக் கூட்டணி முன் எப்போதையும் விட நெருக்கமாக வந்திருப்பதாகவும் பிரிட்டன் பிரதமர் பொறிஸ் ஜோன்சன் கூறினார். "இந்தக் கூட்டு நமது நாட்டு நலன்களைப் பாதுகாப்பதற்கும் மக்களைக் காக்கவும் இன்றியமையாதது" என்று அவர் தெரிவித்தார்.

# சீனாவை முடக்குவதற்காக இணையும் அமெரிக்கா, பிரிட்டன், அவுஸ்திரேலியா

சீனாவை எதிர்கொள்ளும் வகையில் மேம்பட்ட பாதுகாப்பு தொழில்நுட்பங்களைப் பகிர்ந்துகொள்வதற்காக பிரிட்டன், அமெரிக்கா மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் சிறப்பு பாதுகாப்பு உடன்பாடு ஒன்றை அறிவித்துள்ளன.

இந்த கூட்டு மூலம் ஆஸ்திரேலியாவுக்கு முதல் முறையாக அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல்களை உருவாக்கும் வாய்ப்புக் கிடைக்கும்.

ஆக்கஸ் (AUKUS) என்று அழைக்கப்படும் இந்தக் கூட்டுத் திட்டம், செயற்கை நுண்ணறிவு, குவாண்டம் தொழில்நுட்பங்கள் மற்றும் சைபர் தொழில்நுட்பம் ஆகியவற்றையும் கொண்டிருக்கும்

இந்தோ-பசுபிக் பகுதியில் சீனாவின் வளர்ந்து வரும் செல்வாக்கு மற்றும் இராணுவப் பரவல் குறித்து மூன்று நாடுகளும் கவலை கொண்டுள்ளன.

இந்த உடன்பாட்டில் பங்கேற்பதற்காக, பிரான்ஸ் நாட்டால் வடிவமைக்கப்படும் நீர்மூழ்கியை உருவாக்கும் ஒப்பந்தத்தை ஆஸ்திரேலியா ரத்து செய்திருக்கிறது.

அவுஸ்திரேலிய கடற்படைக்கு 12 நீர்மூழ்கிக் கப்பல்களை உருவாக்க பிரான்ஸ் சுமார் 3.5 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான ஒப்பந்தத்தைப் பெற்றது. இது அவுஸ்திரேலியாவின் மிகப்பெரிய ஆயுதத் தளபாட ஒப்பந்தமாகும்.

ஆனால், இந்த ஒப்பந்தப்படி நீர்மூழ்கிகளை உருவாக்குவதற்கான தளவாடங்கள் பெரும்பாலும் உள்நாட்டிலே பெற வேண்டும் என்பதால், இந்தத் திட்டம் தாமதமாகிக் கொண்டிருந்தது.

இந்த நிலையில்தான் அமெரிக்க அதிபர் ஜோ பைடன், பிரிட்டன் பிரதமர் பொறிஸ் ஜோன்சன், அவுஸ்திரேலியாப் பிரதமர் ஸ்கொட் மொரிசன் ஆகியோர் ஆக்கஸ் என்ற பெயரில் புதிய கூட்டுத் திட்டம் பற்றிய அறிக்கையை வெளியிட்டனர்.

"ஆக்கஸின் கீழ் முதல் முயற்சியாக , அணுசக்தி மூலம் இயங்கும் நீர்மூழ்கிக் கப்பல்களை ஆஸ்திரேலியா பெறுவதற்கு உதவி செய்வோம்" என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

"இந்தக் கூட்டு முயற்சி இந்தோ-பசிபிக்கில் ஸ்திரத்தன்மையை ஊக்குவிக்கும். நமது நலன்களுக்கும் மதிப்புக்கும் உதவும் வகையில் பயன்படுத்தப்படும்" என்று அந்த அறிக்கை கூறுகிறது.

"அவுஸ்திரேலியாவின் படைத் திறனை ஒரு குறிப்பிட்ட, அடையக் கூடிய கால அளவுக்குள் மேம்படுத்தி அதைப் பயன்பாட்டுக்குக் கொண்டு வருவதே இந்தக் கூட்டுத் திட்டத்தின் நோக்கமாகும்" என்று அந்த அறிக்கை மேலும் கூறுகிறது.

இருப்பினும் அணு ஆயுதமற்ற நாடாக நீடித்திருப்பதில் அவுஸ்திரேலியா உறுதியாக இருக்கும் என்றும் அதில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

சைபர் திறன்கள், செயற்கை நுண்ணறிவு, "கடலுக்கு அடியில் கூடுத லாகத் திறன்" ஆகியவற்றிலும் இந்தக் கூட்டு முயற்சி கவனம் செலுத்துவதாக அந்த அறிக்கை கூறுகிறது.

இந்த மூன்று நாடுகளும் இயற்கையான கூட்டாளிகள் என்றும், இந்தக் கூட்டணி முன் எப்போதையும் விட நெருக்கமாக வந்திருப்பதாகவும் பிரிட்டன் பிரதமர் பொறிஸ் ஜோன்சன் கூறினார்.

"இந்தக் கூட்டு நமது நாட்டு நலன்களைப் பாதுகாப்பதற்கும், மக்களைக் காக்கவும் இன்றியமையாதது" என்று அவர் தெரிவித்தார்.

அண்மையில் பிரிட்டனின் எச்.எம்.எஸ். ராணி எலிசபெத் விமானம் தாங்கிக் கப்பல் இந்தோ - பசிபிக் பிராந்தியத்துக்கு அனுப்பப்பட்டது. இதில் அமெரிக்க இராணுவத்தினரும் உபகரணங்களும் இருந்தன.

இந்தோ- பசுபிக் பிராந்தியம் பயங்கரவாத அச்சுறுத்தல்களைக் கொண்ட, தீர்க்கப்படாத தகராறுகள் நீடித்திருக்கக் கூடிய, மோதல் ஏற்படும் ஆபத்துகள் நிறைந்திருக்கும் ஒரு பகுதியாகும் என்று பிரிட்ன், அமெரிக்க, ஆஸ்திரேலியக் கூட்டறிக்கை கூறுகிறது. "இது சைபர்ஸ்பேஸ் உள்ளிட்ட புதிய பாதுகாப்பு அச்சுறுத்தல்களில் முன்னணியில் இருக்கிறது" என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**இரகசியம் எதுவுமில்லை**

பிரிட்டன், அமெரிக்கா மற்றும் அவுஸ்திரேலிய நாட்டின் தலைவர்கள் வீடியோ தொழில்நுட்பத்தில் மெய்நிகர் சந்திப்பு முறையில் ஒரே நேரத்தில் பங்கேற்று கூட்டுத் திட்டம் குறித்து அறிவித்திருப்பது, இந்த உடன்பாட்டின் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது. பிரிட்டன் அரசும் இதையே கூறுகிறது.

ஆனால், இந்த உடன்பாடு இரு முக்கிய நாடுகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும். முதலாவது நட்பு நாடான பிரான்ஸ். நேட்டோ அமைப்பில் அங்கம் வகிக்கும் இந்த நாடு அவுஸ்திரேலியாவுடன் டீசலில் இயங்கும் நீர்மூழ்கியை கட்டுவது தொடர்பாக உடன்பாடு செய்திருந்தது. இப்போது இந்த உடன்பாடு முறிக்கப்படுகிறது.

இரண்டாவது நாடு சீனா. இந்த உடன்பாடு எந்த நாட்டுக்கும் எதிரானது அல்ல என்று பிரிட்டன் அதிகாரிகள் கூறி வந்தாலும், இன்னொரு புறம், இந்தப் பிராந்தியத்தில் செழிப்பு, பாதுகாப்பு, ஸ்திரத்தன்மை ஆகியவற்றை உறுதி செய்வதும், சட்டத்தின் அடிப்படையிலான அமைதி நிலையை ஆதரிப்பதும் இந்த உடன்பாட்டின் நோக்கம் என்றும் பிரிட்டன் அரசு கூறுகிறது.

அதனால் இந்தோ - பசுபிக் பகுதியில் சீனாவின் இராணுவச் செல்வாக்கு அதிகரித்து வருவது குறித்து பிரிட்டன், அமெரிக்கா, மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் கவலைகளைப் பகிர்ந்து கொள்வது ஒன்றும் இரகசியம் அல்ல. ■

- பி.பி.சி.

# 2021 க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் வினாத்தாள் கணக்கீடு - I

ஆசிரியர் : கே.பாலகஜன்
நேரம் : 2 மணித்தியாலங்கள்

கல்வி tv CHANNEL

**42)** **LKAS 8 (கணக்கீட்டுக்கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் வழுக்கள்)இன் படி**

அ) கணக்கீட்டுக் கொள்கையினை கம்பனி மாற்றக்கூடிய **இரண்டு சந்தர்ப்பங்களைக்** குறிப்பிடுக.

1. ……………………………………………………………………………………….......

2. ……………………………………………………………………………………….

ஆ) **பின்வரும் கூற்றுக்கள் சரியா அல்லது பிழையா என்பதனைக் குறிப்பிடுக.**

1. **கணக்கீட்டு மதிப்பீட்டு மாற்றங்கள்** நிறுவனமொன்றின் நிதிக்கூற்றுக்களில் **நடைமுறை,எதிர்கால** கணக்கீட்டுக்காலப்பகுதிகளுக்கு சீராக்கப்படுகின்றன. (………..)

2. கணக்கீட்டு கொள்கை மாற்றமானது நிறுவனமொன்றின் நிதிக்கூற்றுக்களில் **கடந்த காலம், நிகழ்காலம்** கணக்கீட்டுக்காலப்பகுதிகளுக்கு சீராக்கப்படுகின்றன. (………..)

**43)** **அபான்ஸ் PLC** 2020.04.01 இல் **கரிகரன்** என்ற வாடிக்கையாளருடன் **போட்டோ பிரதி இயந்திரமொன்றினை** விற்பனை செய்தல் மற்றும் **நான்கு வருட பராமரிப்புச் சேவையை வழங்குதல்** தொடர்பான ஒப்பந்தமொன்றை மேற்கொண்டது. இத்தினத்தில் இயந்திரமானது கரிகரனுக்கு விநியோகிக்கப்பட்டதுடன் சட்டரீதியான **உரிமையும் மாற்றம் செய்யப்பட்டது.** கரிகரன் போட்டோ பிரதி இயந்திரம் மற்றும் நான்கு வருட பராமரிப்புச்சேவைக்காக ரூபா.2400000 இனை வழங்க முன் வந்துள்ளார். **அபான்ஸ் PLC** இனால் இவ்விரண்டும் வெவ்வேறாக **விற்பனை செய்யப்பட்டால்** போட்டோ பிரதி இயந்திரம் ரூபா.2000000 இற்கும், பராமரிப்புச்சேவை ரூபா.1000000 இற்கும் விற்பனை செய்யப்படும். கரிகரன் இதற்கான தொகையினைச் **செலுத்தியிருந்தார். SLFRS 15 (வாடிக்கையாளருக்கான ஒப்பந்தங்களுடன் தொடர்புடைய வருமானம்)** இன் படி **பின்வருவனவற்றைக் குறிப்பிடுக.**

**31.03.2021 இல் நிதிக்கூற்றுக்களின் வெளிப்படுத்தல்கள்**

அ) **வருமானமாக இனங்காணப்படும் பெறுமதி** …..............................................................

ஆ) **இயந்திரப்பராமரிப்புக்கான ஏற்பாட்டு மீதி** ……...............................................................
(உழைக்கப்படாத வருமானம்)

**44)** **வரையறுக்கப்பட்ட டிலக்சன் பொதுக்கம்பனியானது** 01.04.2020 இல் மோட்டார் வாகனமொன்றினை **குத்தகைக் கம்பனியிடமிருந்து குத்தகை முறையில் பெற்றுக்கொண்டது.** இதன் போது **ஆரம்ப கொடுப்பனவாக** ரூபா.100000 செலுத்தப்பட்டது. **2021.03.31** இல் ஆரம்பிக்கப்பட்ட வருடாந்த தவணைக்கட்டணம் ரூபா.50000 வீதம் 5 தவணைக்கட்டணங்களில் செலுத்தப்படல் வேண்டும். இக்குத்தகையில் உள்ளடங்கியுள்ள **வட்டி வீதம் 10% ஆகும்.** இந்த வட்டி வீதத்தின் அடிப்படையில் **வருடாந்த கழிவீட்டுக்காரணி பின்வருமாறு**

| ஆண்டு | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| கழிவீட்டுக்காரணி | 0.9 | 0.8 | 0.7 | 0.6 | 0.5 |

**(சொத்தின் உரிமையானது கம்பனிக்கு உரிமை மாற்றப்படாது)**
**SLFRS 16 இற்கமைய (குத்தகை)**

அ) **2020.04.01** இல் இனங்காணப்படவேண்டிய **குத்தகைக் கொடுப்பனவினை செலுத்துவதற்கான கடப்பாட்டின் பெறுமதி** ……………………………………………

ஆ) **2020.04.01** இல் இனங்காணப்படும் சொத்தினைப் பயன்படுத்தும் உரிமையின் பெறுமதி …………………………………

இ) **2021.03.31** இல் இலாபம்/நட்டம் மற்றும் ஏனைய முற்றுமடங்கிய வருமானக்கூற்றில் இனங்காணப்படும் **குத்தகை தொடர்பான மொத்தச்செலவீனம்** ……………...........

**45)** பின்வரும் தகவல்கள் **கணக்கீட்டு விகிதப்பகுப்பாய்வு** தொடர்பில் **இரண்டு கம்பனிகளுடன்** மேற்கொண்ட **ஆய்வில் இருந்து பெறப்பட்டவை.**

| | பிரபா PLC | கரன் PLC |
|---|---|---|
| மொத்த சொத்துக்கான மீதான வருவாய் வீதம்(%) | 25 | 10 |
| விரைவு விகிதம் | 2:1 | 0.5:1 |
| கடன் உரிமையாண்மை விகிதம் | 2:1 | 1:2 |
| இருப்பு புரள்வு விகிதம்(**தடவைகள்)** | 6 | 10 |
| வட்டி காப்பு விகிதம்(**தடவைகள்)** | 5 | 6 |

**பின்வருவனவற்றைக்குறிப்பிடுக.**

அ) **தாழ் இணைப்பினைக் கொண்டுள்ள கம்பனி** …………………………………………….

ஆ) நிறுவனத்தின் செயற்பாட்டினை **வினைத்திறனாக பயன்படுத்தியுள்ள கம்பனி** ……………………………………………….

இ) நீண்ட கால கடன் வழங்குனரின் **பாதுகாப்பினை மிக சிறப்பாக வெளிப்படுத்துகின்ற கம்பனி** ……………………………………………….

ஈ) **சிறந்த திரவத்தன்மையினைக்** கொண்டுள்ள கம்பனி ……………………………………..

**46)** பின்வரும் தகவல்கள் **ஜோதிகா PLC** இனால் விற்பனை செய்யப்படும் **பொருளொன்றுடன் தொடர்பானவை.**

| **திகதி** | **விபரம்** | **அலகுகள்** | **அலகொன்றுக்கான கிரயம்(ரூபா)** |
|---|---|---|---|
| 2021.03.01 | இருப்பு | 4000 | 40 |
| 2021.03.05 | கொள்வனவு | 10000 | 60 |
| 2021.03.15 | கொள்வனவு | 6000 | 80 |
| 2021.03.25 | விற்பனை | ? | ? |
| 2021.03.31 | இருப்பு | 8000 | ? |

கம்பனியானது இருப்பு வழங்கலை விலையிடுவதற்கு **நிறையளித்த சராசரி முறை(WAC)** பின்பற்றப்படுவதுடன் அலகொன்றுக்கான விற்பனை விலையினை ரூபா.100 ஆகும்.

**பின்வருவனவற்றைக் குறிப்பிடுக.**

அ) **2021.03.31** இல் விற்பனைக்கிரயம் ரூபா ……………………………………………….

ஆ) **2021.03.31** இல் இறுதி இருப்பின் பெறுமதி ரூபா ……………………………………

இ) **2021 மார்ச் மாதக்கிற்கான மொக்க இலாபம் ரூபா** ……………………………….

# அ'புரம் சிறையில் சி.சி.ரி.வி. காட்சிகளை அழிக்க முயற்சி?

கொழும்பு, செப். 17

"அநுராதபுரம் சிறைச்சாலையில் சி.சி.ரி.வி. கமராவில் பதிவான காட்சிகளை அழிப்பதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது எனத் தகவல் வெளியாகியுள்ளது. இந்த நடவடிக்கையை அனுமதிக்க முடியாது.

உரிய சட்ட நடவடிக்கை எடுப்பதற்குத் தயாராகவே இருக்கின்றோம்."

-இவ்வாறு சிறைக்கைதிகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் அமைப்பின் உறுப்பினர் சட்டத்தரணி சேனக பெரேரா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

"அநுராதபுரம் சிறைச்சாலைக்குள் அத்துமீறி நுழைந்துள்ள இராஜாங்க அமைச்சர், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளுள் 8 பேரை முழந்தாளிடவைத்து மிரட்டியுள்ளார். அவரின் இந்த நடவடிக்கை நீதிமன்றத் தீர்ப்பையும் அவமதிக்கும் செயலாகும்.

அதேபோல் கைதிகளைப் பார்வையிடச் செல்லும் சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்துக்குக்கூட துப்பாக்கியுடன் சிறைக்குள் செல்ல முடியாது. அப்படி இருக்கும்போது இராஜாங்க அமைச்சர் எவ்வாறு துப்பாக்கியுடன் சென்றார்?

கைதிகளைப் பார்வையிடும் சிறப்புரிமை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கின்றது என்பதற்காக முறையற்ற விதத்தில் செயல்பட முடியாது. எனவே, இராஜாங்க அமைச்சர் மட்டுமல்ல சிறைச்சாலை ஆணையாளர், சிறைச்சாலை அதிகாரிகளும் இதற்குப் பொறுப்புக்கூற வேண்டும்.

அநுராதபுரம் சிறைச்சாலையிலுள்ள சி.சி.ரி.வி. கமரா காட்சிகளை அழிப்பதற்கான முயற்சி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது எனத் தகவல் வெளியாகியுள்ளது. அவ்வாறான நடவடிக்கையில் அதிகாரிகள் ஈடுபடக்கூடாது.

அதேபோல் இந்த விடயத்தில் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கைதிகளின் உறவினர்கள் எம்மிடம் தெரிவித்துள்ளனர்.

அநுராதபுரத்தில் மட்டுமல்ல வெலிக்கடைச் சிறைச்சாலையிலும் அடாவடித்தனமாக இராஜாங்க அமைச்சர் செயற்பட்டுள்ளார்" - என்றார். (இ)

# புதிய அரசமைப்புக்கான வரைவு நகல் நவம்பரில்

கொழும்பு, செப். 17

புதிய அரசமைப்புக்கான வரைவைத் தயாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவினர், இறுதிச் சட்டவரைபு எதிர்வரும் நவம்பர் மாதம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளிக்கப்படவுள்ளது எனத் தெரியவருகின்றது.

அத்துடன், மேற்படி நிபுணர்கள் குழுவின் ஆயுட்காலமும் மேலும் மூன்று மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் நெருக்கடி நிலைமையால் ஏற்பட்ட சில தாமதங்களைக் கருத்தில் கொண்டே கால நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது எனத் தெரியவருகின்றது.

புதியதோர் அரசமைப்பு உருவாக்கப்படும் என்ற உறுதிமொழியுடனேயே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச ஆட்சிப் பீடம் ஏறினார்.

இந்நிலையில், புதிய அரசமைப்புக்கான வரைவைத் தயாரிப்பதற்காக ஜனாதிபதி சட்டத்தரணி றொமேஷ் டி சில்வா தலைமையில் நிபுணர்கள் குழுவொன்று அமைக்கப்பட்டது.

இந்தக் குழுவானது பொது மக்கள், அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புகளிடமிருந்து புதிய அரசமைப்பு எவ்வாறு அமைய வேண்டும் முன்மொழிவுகளைக் கோரியிருந்தது. இதன்படி பல தரப்பட்ட கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. மேலதிக விவரங்களுக்காக அரசியல் கட்சிகள் மற்றும் இதர தரப்புகளை அழைத்து விளக்கமும் பெற்றிருந்தது.

அதன்பின்னர் விரைவு நகல் தயாரிக்கும் பணி ஆரம்பமானது. தற்போது ஆரம்பகட்ட சட்ட வரைவு ஆய்வு நிலையில் உள்ளது என அறியமுடிகின்றது. சட்ட வரைவு திணைக்களத்தின் கண்காணிப்பின் பின்னர் இறுதி வரைவு தயாரிக்கப்படும் எனத் தெரியவருகின்றது.

அதேவேளை, தான் ஆட்சிக்கு வந்து ஈராண்டுகள் நிறைவு பெறுவதற்குள் புதிய அரசமைப்பு உருவாக்கப்படும் என்ற உறுதிமொழியை ஜனாதிபதி வழங்கியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ)

# 21இல் ஊரடங்கு தளர்வா? இன்று இறுதி தீர்மானம்

## ஜனாதிபதி தலைமையில் கூடுகின்றது கொரோனா ஒழிப்புச் செயலணி



**கொழும்பு, செப். 17**

**நாட்டில் தற்போது அமுலில் உள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை எதிர்வரும் 21ஆம் திகதிக்கு பின்னரும் நீடிப்பதா அல்லது தளர்த்தப்படுமா என்பது குறித்து இன்று தீர்மானம் எடுக்கப்படவுள்ளது.**

கொரோனா ஒழிப்புச் செயலணியின் வாராந்த மீளாய்வுக் கூட்டம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் இன்று முற்பகல் நடைபெறும்.

இதன்போதே நாட்டின் தற்போதைய நிலைமை மீளாய்வு செய்யப்பட்டு, தீர்மானம் எடுக்கப்படவுள்ளது.

பெரும்பாலும் கடும் சுகாதாரக் கட்டுப்பாடுகளுடன் நாடு திறக்கப்படலாம் எனவும், மாகாணங்களுக்கிடையிலான பயணத்தடை தொடரும் எனவும் தெரியவருகின்றது. (இ)

# தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய மேலும் 965 பேர் கைது

## மேல் மாகாணத்தில் சோதனை நடவடிக்கைகள் தீவிரம்



கொழும்பு, செப். 17

"தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறுவோரை கைதுசெய்யும் நடவடிக்கை தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்நிலையில், தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 965 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் 89 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன."

- இவ்வாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார். ஊடகங்களுக்கு வெளியிட்ட காணொளிப் பதிவிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை கைதுசெய்யப்பட்டோரின் எண்ணிக்கை 73 ஆயிரத்து 78 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, மேல்மாகாணத்துக்கு உள்நுழையும் மற்றும் வெளியேறும் 13 இடங்களில் நேற்றுமுன்தினம் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது, தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறி 197 வாகனங்களில் பயணித்த 308 பேர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

மேல் மாகாணத்தில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு விதிமுறைகளை மீறிப் பயணிப்போரைக் கைதுசெய்யும் நடவடிக்கை நேற்றுமுன்தினமும் முன்னெடுக்கப்பட்டது.

318 பொலிஸார் இணைந்து காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை இந்தச் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இதன்போது அனுமதிப் பத்திரமின்றில 758 வாகனங்களில் பயணித்த 1147 பேர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்" - என்றார். (இ)

# நாட்டை முழுமையாக திறக்கவே வேண்டாம்

## விசேட மருத்துவ நிபுணர்கள் வலியுறுத்து

கொழும்பு, செப். 17

"நாட்டை முழுமையாகத் திறக்கும் அளவுக்கு ஆரோக்கியமான மட்டத்தை நாம் இன்னமும் அடையவில்லை. இப்போதும் நாட்டில் டெல்டா வைரஸ் தொற்று வேகமாகப் பரவிக்கொண்டுள்ளது. இவ்வாறான நிலையில் கட்டுப்பாடுகள் இல்லாது நாட்டைத் திறந்தால், மிக மோசமான இன்னொரு கொரோனா வைரஸ் அலைக்கு முகங்கொடுக்க நேரிடும்."

- இவ்வாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவிடம் விசேட வைத்திய நிபுணர்கள் கூட்டாகச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பலவீனமான சுகாதாரக் கட்டமைப்பு காரணமாக நாட்டில் தென்னாபிரிக்க வைரஸ் பரவ அதிக வாய்ப்புகள் உள்ளன எனவும் விசேட வைத்திய நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

"நாடாகஇன்னமும்கொரோனா வைரஸ் பரவல் அச்சுறுத்தலில் இருந்து நாம் விடுபடவில்லை.

ஒவ்வொரு நாளும் இரண்டாயிரத்துக்கும் அதிகமான வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர்.

ஒரு வாரத்தில் பத்தாயிரத்துக்கும் அதிகமான வைரஸ் தொற்றாளர்களும், ஆயிரம் அல்லது ஆயிரத்தையும் தாண்டிய வாராந்த கொரோனா மரணங்களும் இன்னும் நாட்டில் பதிவாகிக்கொண்டிருக்கின்றன.

இந்நிலையில். இது சாதாராண நிலைமை அல்ல. நாம் இப்போது கட்டுப்பாடுகள் இல்லாது செயற்பட முடியும் என்றோ அல்லது நாடு தற்போது எச்சரிக்கை மட்டத்தில் இருந்து விடுபட்டுள்ளது என்றோ எம்மால் ஒரு போதும் கூறிவிட முடியாது.

நாம் இப்போதும் சிவப்பு எச்சரிக்கை மட்டத்திலேயே உள்ளோம்" எனவும் விசேட வைத்திய நிபுணர்கள், ஜனாதிபதியிடம் மேலும் தெரிவித்துள்ளனர். (இ)

# வவுனியாவில் மேலும் 4 பேர் கொரோனாவால் உயிரிழப்பு


வவுனியா, செப். 17

வவுனியா மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் நால்வர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கொரோனாத் தொற்று காரணமாக சிகிச்சை பெற்று வந்த, தொற்றுக்குள்ளான நிலையில் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த மற்றும் தொற்றுக்குள்ளான நிலையில் வீடுகளில் இருந்தோர் என நால்வர் தொற்றால் மரணமடைந்துள்ளனர்.

நெளுக்குளத்தில் ஒருவர், கோவில் குளத்தில் ஒருவர், பம்பைமடுப் பகுதியில் அமைந்துள்ள காப்பகத்தில் இருவர் என அந்தப் பகுதிகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கொரோனாத் தொற்றால் மரணித்தவர்களாவர்.

இந்நிலையில், மரணித்த 4 பேரினதும் உடல்களையும் சுகாதார நடைமுறைகளை பின்பற்றித் தகனம் செய்ய சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (இ)



### விண்வெளிக்கு சுற்றுலா!

# 4 பயணிகளுடன் விண்ணில் பாய்ந்தது போல்கன் ஏவூர்தி!

புளொரிடா, செப். 17

அமெரிக்காவின் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் முதன் முறையாக 4 அமெரிக்கர்களை விண்வெளிக்கு சுற்றுலா அனுப்பியுள்ளது.

நேற்று அதிகாலை 5.32 மணிக்கு (இலங்கை நேரம்) போல்கன் 9 ஏவூர்தி (றொக்கெட்) 4 பயணிகளுடன் விண்ணில் பாய்ந்தது.

அமெரிக்காவின் ஷிப்ட் 4 பேமன்ஸ் நிறுவனத்தின் தலைவர் கோடீஸ்வரர் ஜரிட் ஐசக்மான் தலைமையி லான 4 பேர் கொண்ட குழுவினரே இவ்வாறு விண்வெளிக்கு பயமாகினர். இவர்கள் பயணித்த விண்கலத் துக்கு இன்ஸ்பிரேஷன் - 4 என்று பெயரிடப்பட்டுள்ளது.

புளொரிடாவின் கேப் கேனரவல் தளத்திலிருந்து இந்த ஏவூர்தி விண்ணி பாய்ந்து 12 நிமிடங்களில் அதன் இரண்டாவது அடுக்கு தனியாகப் பிரிந்து வெற்றிகரமாக புவியின் நீள்வட்ட பாதைக்குள் நுழைந்தது.

பூமியிலிருந்து 575 கி.மீ உயரத்தில் இந்த விண்கலம் அடுத்த 3 நாட்களுக்குச் சுற்றி வரும். மணிக்கு 27 ஆயிரத்து 300 கிலோ மீற்றர் வேகத்தில் பயணிக்கும் இந்த விண்கலம், 90 நிமிடங்களுக்கு ஒருமுறை பூமியை முழுவதுமாக சுற்றி வரும்

3 நாட்கள் விண்வெளி பயணத்திற்கு பிறகு அத்திலாந்திக் கடலில் போல்கன் ஏவூர்தி வெற்றிகரமாகத் தரையிறங்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுநாள்வரை அரசின் மூலம் பயிற்சிபெற்று அதி காரபூர்வ பயணத்தை மட்டுமே விண்வெளி வீரர்கள் மேற்கொண்டு வந்தனர். முதல் முறையாக, இந்த 4 பேரும் விண்வெளிக்கு சுற்றுலாப் பயணம் மேற்கொண்ட முதல் பொதுமக்கள் என்ற சிறப்பை பெற்றுள்ளனர். (ஐ)

### சீனாவை எதிர்கொள்வதற்கு

# பிரிட்டன், அமெரிக்கா, ஆஸி. கூட்டு பாதுகாப்பு ஒப்பந்தம்!

வாஷிங்டன், செப். 17

பிரிட்டன், அமெரிக்கா, அவுஸ் திரேலியா ஆசிய - பசுபிக் பாது காப்பு ஒப்பந்தத்தில் இணைந்துள் ளன. “ஆக்கஸ்“ (AUKUS) என்று பெயரிடப்பட்டுள்ள இந்த ஒப்பந்தம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது. அத்துடன், இது சீனாவை எதிர்கொள்ளும் முயற்சியாகவும் கருதப்படுகின்றது.



அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், பிரிட்டன் பிரதமர் பொறிஸ் ஜோன்சன், அவுஸ்திரேலிய பிரதமர் ஸ்கொட் மொறிசன் ஆகியோர் இந்தப் புதிய கூட்டு ஒப்பந்தத்தை நேற்று அறிவித்தனர்.

இந்த கூட்டின் மூலம் அவுஸ் திரேலியாவுக்கு முதன்முறையாக அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல்களை உருவாக்கும் வாய்ப்பு கிடைக்க வுள்ளது.

செயற்கை நுண்ணறிவு, குவாண்டம் தொழில்நுட்பங்கள் மற்றும் சைபர் தொழில் நுட்பம் ஆகியவற்றைக் கொண்டிருக்கும். இந்தோ - பசுபிக் பகுதியில் சீனாவின் வளர்ந்து வரும் செல்வாக்கு மற்றும் இராணுவ பரவல் குறித்து மூன்று நாடுகளும் கவலை கொண்டுள்ள நிலையிலேயே அதனை சமாளிக்கும் வகையில் இந்த ஒப்பந்தம் செய்துகொள்ளப்படுகிறது.

ஆக்கஸின் கீழ் முதல் முயற்சியாக, அணுசக்தி மூலம் இயங்கும் நீர்மூழ்கிக் கப்பல்களை அவுஸ்தி ரேலியா பெறுவதற்கு உதவி செய் வோம் என அமெரிக்கா மற்றும் பிரிட்டன் நாடுகள் அறிவித்துள்ளன.

இந்த மூன்று நாடுகளும் இயல்பாகவே கூட்டாளிகள் என்றும், இந்தக் கூட்டணி முன் எப் போதையும் விட நெருக்கமாக அமைந்துள்ளதாகவும் பிரிட்டன் பிரதமர் பொறிஸ் ஜோன்சன் தெரிவித்துள்ளார். இந்தக் கூட்டு நமது நாட்டு நலன்களைப் பாது காப்பதற்கும், மக்களைக் காக்கவும் இன்றியமையாதது என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, “இந்த ஒப்பந்தம் மிகவும் பொறுப்பற்றது - பிராந்திய அமைதி மற்றும் ஸ்திரதன்மையை தீவிரமாக குறைமதிப்புக்கு உட்படுத்துகிறது. ஆயுதப் போட்டியையும் தீவிரப்படுத்து கிறது.”, என்று சீனா கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்த ஒப்பந்தம் பிரான்ஸூடன் ஒரு முரண்பாட்டையும் உருவாக்கியுள்ளது. 12 நீர் மூழ்கி கப்பல்களை உருவாக்க அவுஸ்திரேலியாவுடன் பிரான்ஸ் செய்த ஒப்பந்தம் ஒன்று முறிக்கப்பட்டுள்ளது. இதனால், “இது உண்மையில் முதுகில் குத்திய செயல்”, என்று பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சர் ஜூன் யெவ்ஸ் லெட்ரியன் தெரிவித்துள்ளார். (ஐ)

# உலகின் சக்திவாய்ந்த தலைவராக தலிபானின் பரதரும் தெரிவானார்

நியூயோர்க், செப். 17

உலகின் செல்வாக்குமிக்க நூறு தலைவர்களுள் ஒருவராக ஆப்கானிஸ்தானின் துணை தலைவர் முல்லா அப்துல் கனி பரதர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தலிபான் அமைப்பின் அரசியல் பிரிவு தலைவரான இவரே அமெரிக்காவுடன் பேச்சு நடத்தியதுடன், டோஹா உடன்படிக்கையை தலிபான்கள் ஏற்கவும் செய்திருந்தார்.

அமைதியான நபராகக் கருதப்படும் இவர் குறித்த தகவல்கள் இரகசியமாகவே உள்ளன. இவரின் அறிக்கை மிக அரிதாகவே வெளிஷ யா கின.

பாகிஸ்தான் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்ட அப்துல் பரதர், ஆப்கானிஸ்தானை தலிபான்கள் கைப்பற்றவும் காரணமாக அமைந்தார். ஆட்சியாளர்களுக்கு பொது மன்னிப்பு, அயல் நாடுகளுடன் தொடர்பு கொள்ளல், தலிபான்களின் சீனா, பாகிஸ்தான் பயணம் எனப் பல முக்கிய விடயங்கள் அப்துல் பரதருடனான ஆலோசனையின் படியே செயல்படுத்தப்பட்டன என்று கூறப்படுகின்றது.



இதேவேளை, இந்த 100 பேர் பட்டியலில் அமெரிக்க, சீனா ஜனாதிபதிகள், இந்திய பிரதமர் ஆகியோரின் பெயர்களும் இடம்பெற்றுள்ளன.(ஐ)

# ஆபிரிக்க நாடுகளுக்கு 20 கோடி தடுப்பூசிகள்!

பிரசெல்ஸ், செப். 17

ஆபிரிக்க நாடுகளுக்கு 20 கோடி கொரோனா தடுப்பூசிகளை வழங்கவுள்ளதாக ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர் உர்ஸூலா வான் டேர் லேயன் கூறுகையில்,

“20 கோடி கொரோனா தடுப்பூசி டோஸ்கள் அடுத்த ஆண்டு ஜூன் மாதத்துக்குள்

வழங்கப்படும். உலகளவில் செலுத்தப்பட்டுள்ள கொரோனா தடுப்பூசிகளில் ஒரு சதவீதத்துக்கும் குறைவாகவே ஏழை நாடுகளில் செலுத்தப்பட்டுள்ளது. இந்த முரண்பாட்டைக் களையும் வகையில்

உலகளாவிய தடுப்பூசி திட்டத்துக்கு முன்னுரிமை அளிப்போம்”, என்றார். (ஐ)



# ஐ. எஸ்ஸின் முக்கிய தலைவர் பிரான்ஸின் தாக்குதலில் பலி!

பாரிஸ், செப். 17

அமெரிக்க சிறப்பு படையினர் மீது தாக்குதல் நடத்திய ஐ.எஸ். அமைப்பின் முக்கிய தலைவர்களுள் ஒருவரான அபு வாலித் அல்-சஹ்ராவி பிரான்ஸ் படைகள் நடத்திய தாக்குதலில் உயிரிழந்தார்.

இந்தத் தகவலை பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மக்ரோன் நேற்று தனது ருவிட்டர் பதிவில் உறுதிப் படுத்தியுள்ளார்.

சஹ்ராவி ஐ. எஸ். எனப்படும் இஸ்லாமிய அரசு பயங்கரவாத அமைப்பை மேற்கு ஆபிரிக்காவில் ஐ. எஸ். ஜீ. எஸ். என்ற பிரிவாக ஆரம்பித்திருந்தார். இவர் தலைமையிலான குழு 2020 ஓகஸ்டில் ஆறு பிரெஞ்சு தொண்டு நிறுவன ஊழியர்களையும் அவர்களின் நைஜீரிய சாரதியையும் கொன்றிருந்தது.

சஹேல் என்ற பகுதியில் சஹ்ராவி கட்டுப்பாட்டில் வைத்திருந்தார். சஹேல் சகாரா பாலைவனத்தின் செனகல் முதல் சோமாலியா வரை பரந்த 11.6 இலட்சம் சதுர கி. மீ. பகுதியாகும்.

இந்த நிலையிலேயே, பிரான்ஸ் படையினரின் விசேட தாக்குதலில் கொல்லப்பட்டார். எனினும், சஹ்ராவி எங்கு கொல்லப்பட்டார் என்பது தொடர்பில் பிரான்ஸ் ஜனாதிபதி தகவல் வெளியிடவில்லை. (ஐ)

# ஏட்டிக்கு போட்டியாக ஏவுகணை சோதனை கொரிய தீபகற்பத்தில் மீண்டும் பதற்றநிலை!

சியோல், செப். 17

வடகெரியா, தென்கொரியா மாறிமாறி நடத்திய ஏவுகணை பரிசோதனையால் கொரிய தீபகற்பத்தில் மீண்டும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை வடகொரியா அணு ஆயுதத்தை தாங்கி செல்லவல்ல குறுகிய, நீண்ட தூர ஏவுகணைகள் இரண்டை ஏவிப் பரிசோதித்தது. இதற்கு முன்னரும் கடந்த சனி, ஞாயிறு தினங்களில் அந்த நாடு ஏவுகணை பரிசோதனையில் ஈடுபட்டது.

இந்தப் பரிசோதனையை தொடர்ந்து தென்கொரியாவும் ஓர் ஏவுகணையை ஏவியது. நீர்மூழ்கி கப்பலில் இருந்து அந்த ஏவுகணை ஏவப்பட்டது. இது குறித்த இலக்கை அடைந்ததாக தென் கொரிய ஜனாதிபதி மூன் ஜே இன் அறிவித்திருந்தார். அத்துடன், இது முன்னரே திட்டமிடப்பட்டது. வடகொரியாவுக்கு பதிலடி இல்லை என்றும் கூறிய அவர், “ வடகொரியாவின் சீண்டல்களுக்கு எந்த நேரத்திலும் பதிலளிக்கும் திறனைப் பெற்றுள்ளோம் என்றும் கூறினார்.

இதைத் தொடர்ந்து, கொரிய தீபகற்பத்தில் ஆயுதப் போட்டியும் பதற்றமும் மீண்டும் அதிகரித்துள்ளன. (ஐ)

### சம்பியன்ஸ் கிண்ணம்:

# மூனிச்சிடம் வீழ்ந்தது பார்ஸிலோனா அணி!

பார்ஸிலோனா, செப். 17

சம்பியன்ஸ் லீக் உதைபந்தாட்ட போட்டியில் பேயர்ன் முனீச் 3-0 என்ற கோல் கணக்கில் பார்ஸிலோனாவை வீழ்த்தியது.

பார்ஸிலோனாவில் இருந்து மெஸ்ஸி வெளியேறிய பிறகு அந்த அணிக்கு இது முதல் தோல்வியாகும்.

விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் இரு அணிகளுமே ஆக்ரோஷமாக விளையாடத் தொடங்கின. எனினும், இரு அணிகளின் அடுத்தடுத்த கோல் முயற்சிகளுக்கும் பலன் கிடைக்காமல் போனது. இறுதியாக 34-ஆவது நிமிடத்தில் கோலடித்தது பேயர்ன் முனீச்.

அந்த நிமிடத்தில் சக வீரர் லெராய் சனேவின் உதவியுடன் பந்தை கோல் போஸ்ட்டுக்குள் தள்ளினார் தாமஸ் முல்லர். இதனால் ஆட்டத்தின் முதல் பாதியிலேயே பேயர்ன் முன்னிலை பெற்றது. பின்னர் நடைபெற்ற 2ஆவது பாதியில் 56ஆவது நிமிடத்தில் 2ஆவது கோல் வாய்ப்பும் அந்த அணிக்கு கிடைத்தது.

சக வீரர் முசியாலா உதைத்த பந்து கோல் கம்பத்தில்பட்டு மீண்டும் களத்துக்கு திரும்ப, அதைத் தடுக்க முயன்று கீழே விழுந்த பார்சிலோனா கோல் காப்பாளர் சுதாரிப்பதற்கு முன்பாகவே அந்தப் பந்தை மீண்டும் கோல் கம்பத்துக்குள் விரட்டினார் பேயர்ன் வீரர் ரொபேர்ட் லெவாண்டோவ்ஸ்கி.

கடைசியாக 85ஆவது நிமிஷத்தில் பேயர்ன் 3ஆவது கோல் அடித்து தனது வெற்றியை உறுதி செய்தது. இந்த முறை ரொபேர்ட் லெவாண்டோவ்ஸ்கி தனது அணிக்காக 2ஆவது கோல் அடித்தார். சக வீரர் நர்பியின் கோல் முயற்சி வீணாகி மீண்டும் களத்துக்கு திரும்பிய பந்தை லெவாண்டோவ்ஸ்கி கோலாக மாற்றினார். (ஐ)



# ஐ.பி.எல். போட்டியை காண ரசிகர்களுக்கு அனுமதி!

டுபாய், செப். 17

ஐ. பி. எல். போட்டியை காண குறைந்தளவான ரசிகர்கள் அனுமதிக்கப்படுவர் என்று ஐ.பி.எல். நிர்வாகம் அறிவித்துள்ளது.

தொற்று அச்சத்தால் நிறுத்தப்பட்ட ஐ. பி. எல். தொடரின் மீதிப் போட்டிகள் ஐக்கிய அரபு இராச்சியத்தில் நாளை மறுதினம் தொடங்குகின்றது.இந்த நிலையில், போட்டிகளைப் பார்க்க டுபாய், ஷார்ஜா, அபுதாபி மைதானங்களில் குறைந்தளவான ரசிகர்கள் அனுமதிக்கப்படுவர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், எத்தனை ரசிகர்கள் அனுமதிக்கப்படுவர் என்ற விவரம் வெளியிடப்படவில்லை. இருக்கையின் 50 வீத எண்ணிக்கைக்கு ரசிகர்கள் அனுமதிக்கப்படலாம் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)






## சி. பி. எல். ரி - 20 இறுதியாட்டம்

# டுவைன் பிராவோவின் அணி கடைசி பந்தில் 'த்ரில்' வெற்றி

சென். கிற்ஸ், செப். 17

டொமினிக் டிரேக்கின் அதிரடி ஆட்டத்தால் இறுதி ஆட்டத்தில் சென். லூசியா அணியை 3 விக்கெட்களால் வீழ்த்தி முதன்முறையாக சம்பியன் பட்டத்தை கைப்பற்றியது டுவைன் பிராவோ தலைமையிலான சென். கிற்ஸ் அன்ட் நெவிஸ் பாட்ரியோட்ஸ் அணி.

சி. பி. எல். என்று அழைக்கப்படும் கரீபியன் பிறீமியர் லீக் இருபது - 20 தொடரின் இறுதியாட்டம் நேற்று முன்தினம் நடந்தது.

சென். கிற்ஸில் நடந்த இந்த ஆட்டத்தில், முதலில் துடுப்பெடுத் தாடியது சென். லூசியா கிங்ஸ் அணி.

நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 7 விக்கெட்கள் இழப்புக்கு 159 ஓட்டங்கள் சேர்த்தது. 160 ஓட்டங்கள் சேர்த்தால் வெற்றி எனும் இலக்குடன் களமிறங்கிய சென். கிற்ஸ் அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்கள் இழப்புக்கு 160 ஓட்டங்கள் சேர்த்து 3 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

டுவைன் பிராவோ தலைமையிலான சென் கிற்ஸ் அணி முதன்முறையாக சம்பியன் பட்டத்தை வென்றுள்ளது. கிறிஸ் கெயில், டுவைன் பிராவோ, இவின் லூயிஸ் ஆகியோர் சென். கிற்ஸ் அணியை அரையிறுதிக்கு அழைத்துவந்த நிலையில் இளம் வீரர்களான டொமினிக் ட்ரேக்ஸ், ஜோஷ்வா டா சில்வா, பேபியன் அலன், ஷெர்பானே ரதர்போர்ட் ஆகியோர் இறுதி ஆட்டத்தில் பங்களிப்புச் செய்து சம்பியன் பட்டம் வெல்ல துணை செய்தனர்.

சென். கிற்ஸ் அணியின் நடுவரிசை வீரர் டொமினிக் ட்ரேக்ஸ் 24 பந்துகளில் 48 ஓட்டங்கள் சேர்த்து ஆட்டமிழக்காமல் இருந்து அணி கிண்ணம் வெல்லக் காரணமாக இருந்தார். ஆட்டநாயகன் விருதையும் ட்ரேக்ஸ் வென்றார், தொடர் நாயகன் விருது ரஸ்டன் சேஸுக்கு வழங்கப்பட்டது. ஜோஷ்வா டா சில்வா(37), ரதர்போர்ட்(25) ஓட்டங்கள் சேர்த்து வெற்றிக்கு குறிப்பிடத்தக்க காரணமாக அமைந்தனர்.

160 ஓட்டங்கள் சேர்த்தால் வெற்றி எனும் இலக்குடன் சென். கிற்ஸ் அணி களமிறங்கி ஒரு கட்டத்தில் 14 ஓவர்களில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 95 ஓட்டங்கள் என்று தோல்வியின் பிடியில் இருந் தது. கெயில்(0), லூயிஸ்(6), பிராவோ(8), ரதர்போர்ட்(25), டா சில்வா(37) ஆகியோர் வீழ்ந்த நிலையில் தோல்வியை நோக்கி அணி தள்ளப்பட்டது.

ஆனால், நடுவரிசை வீரரான டொமினிக் ட்ரேக் தனது அதிரடியான துடுப்பாட்டம் மூலம் தோல்வியிலிருந்து அணியை மீட்டார். கடைசி 5 ஓவர்களில் வெற்றிக்கு 55 ஓட்டங்கள் தேவைப்பட்டன. வகாப் ரியாஸ், வீஸ் பந்துவீச்சில் சிக்ஸர்களையும், பௌண்ட்ரிகளையும் டிரேக்ஸ் விளாச அணி வெற்றியை நோக்கி நகர்ந்தது. ட்ரேக்ஸ், பேபியன் அலன் இருவரின் ஆட்டம் சென். லூசியா அணிக்கு பயத்தை ஏற்படுத்தியது.

கடைசி 3 ஓவர்களில் வெற்றிக்கு 31 ஓட்டங்கள் தேவைப்பட்டன. வகாப் ரியாஸ் வீசிய 19ஆவது ஓவரில் அலன் 20 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார், அடுத்து காட்ரெல் களமிறங்கினார். மனம் தளராமல் ஆடிய ட்ரேக்ஸ் அந்த ஓவரை சரியாகப் பயன்படுத்தி சிக்ஸர், பௌண்ட்ரியை விளாசினார். அதே ஓவரில் காட்ரெல் 'ரன்அவுட்' ஆகி வெளியேறினார்.

கடைசி ஓவரில் சென். கிற்ஸ் அணியின் வெற்றிக்கு 9 ஓட்டங்கள் தேவைப்பட்டன. நஷீம் ஷா, ட்ரேக்ஸ் களத்தில் இருந்தனர். கடைசி ஓவரை வில்லியம்ஸ் வீசினார். முதல் பந்தில் ட்ரேக்ஸ் ஓர் ஓட்டமும், 2ஆவது பந்தில் நஷீம் ஓர் ஓட்டமும் எடுத்தனர். 3ஆவது பந்தில் ட்ரேக் ஓட்டம் ஏதும் எடுக்கவில்லை.

4ஆவது பந்தில் ட்ரேக் 2 ஓட்டங்கள் எடுத்தார். 5ஆவது பந்தில் ட்ரேக் பௌண்ட்ரி விளாச ஆட்டம் பரபரப்புக்கு வந்தது. கடைசிப் பந்தில் வெற்றிக்கு ஓர் ஓட்டம் தேவைப்பட்டது. வில்லியம்ஸ் யோர்க்கராக வீச, அதை ட்ரேக்ஸ் தட்டிவிட்டு ஓர் ஓட்டம் எடுத்து வெற்றியைப் பெற்றுக் கொடுத்தார்.

ஆட்டநேர முடிவில் ட்ரேக்ஸ் 48 ஓட்டங்களுடனும் (3சிக்ஸர், 3 பௌண்ட்ரி), நஷீம் ஓர் ஓட்டத்துடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

சென். லூசியாவின் பந்துவீச்சில் வகாப் ரியாஸ் 2 விக்கெட்களையும், சேஸ், ஜோஸப், வீஸ் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.முன்னதாக முதலில் துடுப்பெ டுத்தாடிய சென். லூசியா அணிக்கு கோர்ன்வெல் 43 ஓட்டங்கள், ரஸ்டன் சேஸ் 43 ஓட்டங்களை எடுத்தனர். (ஐ)

# பிபா உதைபந்து தரவரிசை இங்கிலாந்து 3ஆவது இடம்!

சூரிச், செப். 17

உலக உதைபந்தாட்ட அணிகளின் தரவரிசையில் பெல்ஜியம், பிரேஸில், இங்கிலாந்து அணிகள் முதல் மூன்று இடங்களை பிடித்துள்ளன.

உலக உதைபந்தாட்ட சம்மேளனமான பிபா அணிகளின் தரவரிசை பட்டியலை வெளியிட்டுள்ளது.

இதில், இங்கிலாந்து அணி 9 வருடங்கள் கழித்து மூன்றாவது இடத்தை பிடித்துள்ளது.

ஜூலை மாதம் நடந்த ஐரோப்பிய 2020ஆம் ஆண்டுக்கான உதைபந்தாட்ட போட்டியின் இறுதியாட்டத்தில் இத்தாலியிடம் இங்கிலாநது அணி தோல்வியை தழுவியிருந்தது.

எனினும், இந்த மாத தொடக்கத்தில் ஹங்கேரி, அந்தோரா அணிகளை 4 -0 என்ற கோல்கள் கணக்கில் இங்கிலாந்து வெற்றி கொண்டது. அத்துடன், ஹங்கேரியுடனான போட்டியை சமநிலையில் நிறைவு செய்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

2012ஆம் ஆண்டு இங்கிலாந்து அணி இறுதியாக மூன்றாம் இடத்தைப் பிடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# காணாமல்போன வயோதிபர் ஆற்றிலிருந்து சடலமாக மீட்பு

பத்தனை, செப். 17

திம்புள்ளை - பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பத்தனை ஆற்றிலிருந்து ஆண் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொட்டகலை, வூட்டன் பகுதியைச் சேர்ந்த 60 வயதுடைய ஏ.தங்கவேல் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் கடந்த 9ஆம் திகதி முதல் காணாமல்போய் விட்டார் என்று பொலிஸ் நிலையத்தில் அவரது உறவினர்களால் முறைப்பாடு பதிவு செய்துள்ள நிலையிலேயே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவரின் மரணம் தொடர்பாகப் பலகோணங்களில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

நுவரெலியா நீதிமன்ற நீதிவானின் மரண விசாரணைகளின் பின் சடலம் வைத்திய பரிசோதனைக்காக நுவரெலியா ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர். (இ)

# மரண அறிவித்தல்

மலர்வு 25 - 08 - 1932



உதிர்வு 10 - 09 - 2021

## திருமதி சின்னம்மா பரராஜசிங்கம்

*(நயினாதீவு - சுவிஸ்)*

யாழ். நயினாதீவு 3ஆம் வட்டாரம் வீரபத்திரர்கோவிலடியைப் பிறப்பிடமாகவும், பருத்தித்துறை அல்வாய் வடக்கு, அல்வாய் நாவலடி சந்தி, ராஜவில்லா இல்லம், சுவிஸ் Zurich ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட சின்னம்மா பரராஜசிங்கம் அவர்கள் 10.09.2021 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார் .

அன்னார், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-ராமாசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், வல்வெட்டித்துறையை சேர்ந்த காலஞ்சென்றவர்களான குழந்தைவேல்- ராசம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற பரராஜசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், சபாபதிப்பிள்ளை (திருகோணமலை), காலஞ்சென்றவர்களான வேலாயுதம், குமரையா, பொன்னம்மா, பராசக்தி, விசாலாட்சி, பார்வதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஈஸ்வரமூர்த்தி, சிறிபக்தலிங்கம், சிறிராம், சிவசிறி (Winterthur- சிவ அல்லது சிறி, அல்வாய் வடக்கு நண்பர்களுக்கு பிள்ளையார்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சுரேந்தினி, காந்திமலர், ஜெயானந்ததேவி, யூலியானா, காலஞ்சென்ற திசைவீரசிங்கம் (புங்குடுதீவு 10 ம் வட்டாரம் - வீராமலை), மனோன்மணி (சுவிஸ் பேர்ன்), சிவம் (சுவிஸ் ஓல்டன்), நாகேஸ்வரி (திருநெல்வேலி), காலஞ்சென்ற மங்களகௌரி (திருநெல்வேலி), ரவீந்திரன் (நயினாதீவு), உதயமலர் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், சீதாசரஷ்வதி (கொழும்பு), இளங்கோவன் (சுவிஸ் பேர்ன்), சிற்றம்பலம் (அச்சுவேலி), விவேகானந்தன் (யாழ்ப்பாணம்), காசிநாதன் (மணிவண்ணன் - யாழ்ப்பாணம்) ஆகியோரின் சின்னம்மாவும், காலஞ்சென்ற கருணாநிதி, கந்தவேல் (நல்லூர்), ஈஸ்வரன் (கனடா), திருமகள் (கனடா), ராஜலஷ்மி (மணி - கனடா), ஆகியோரின் பாசமிகு குஞ்சியாத்தாவும், சஹானா, சனோர், சிகானியா, சிசாயினி, ராகவி, ரவீனா, ரதீஸ், ஸ்கார்லெட் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

*பார்வைக்கு*
Sunday, 12 Sep 2021 8:30 AM - 11:30 AM
Thursday, 16 Sep 2021 7:30 AM - 4:30 PM
krematorium Nordheim Käferholzstrasse 101, 8046 Zürich, Switzerland

*கிரியை*
Friday, 17 Sep 2021 10:00 AM - 2:00 PM
krematorium Nordheim Käferholzstrasse 101, 8046 Zürich, Switzerland

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
**குடும்பத்தினர்.**

**தொடர்புகளுக்கு:**
*சிறிபக்தலிங்கம் (பூசாஸ்ரீ) (மகன்) - 0041789554724*
*சிறிராம் (மகன்) - 0041764031971*
*சிவசிறி (Winterthur - பிள்ளையார்) (மகன்) - 0041762135336*

# முறைப்பாடு அளிக்கப்பட்டால் லொஹான் மீது நடவடிக்கை

## அமைச்சர் சரத் வீரசேகர உறுதியளிப்பு



கொழும்பு, செப். 17

**இரண்டு சிறைச்சாலைகளில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து முறைப்பாடு அளிக்கப்பட்டால் சிறை நிர்வாகம் மற்றும் கைதிகளின் மறுவாழ்வு முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் தயாராகவுள்ளோம் என்று பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் (ஓய்வு) சரத் வீரசேகர தெரிவித்தார்.**

கடந்த ஞாயிற்றுக்கிழமை வெலிக்கடை மற்றும் அநுராதபுரம் சிறைச்சாலைகளுக்குள் வலுக்கட்டாயமாக நுழைந்தார் எனக் குற்றம் சாட்டப்பட்ட லொஹான் ரத்வத்த நேற்று முன்தினம் தனது பதவியில் இருந்து விலகினார். அவர் மது போதையில் தனது நண்பர்கள் குழுவுடன் சிறை வளாகத்துக்குள் நுழைந்தார் எனக் கூறப்படுகின்றது. அதேநேரத்தில் அவர் அநுராதபுரம் சிறையில் தமிழ் அரசியல் கைதிகளைத் துப்பாக்கி முனையில் மிரட்டினார் எனவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் குறித்து கருத்துத் தெரிவித்த பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் (ஓய்வு) சரத் வீரசேகர, இது தொடர்பாக முறைப்பாடு அளித்தால், சம்பவங்கள் குறித்து அவருக்கு எதிராக தனது அமைச்சு நடவடிக்கை எடுக்கவுள்ளது எனக் கூறினார்.

சிறைச்சாலைகள் திணைக்களம் தனது அமைச்சகத்தின் கீழ் வருகின்றது எனக் கூறிய அவர், சிறை வளாகங்களுக்குள் ஆயுதங்களைப் பயன்படுத்துவதற்கு எதிராக அமைச்சால் நடவடிக்கை எடுக்க முடியும் என்றார்.

"அவர் பயன்படுத்திய துப்பாக்கி, உரிமம் பெற்றதாக நான் நினைக்கிறேன். எவ்வாறாயினும், இந்தச் சம்பவங்கள் தொடர்பாக யாராவது முறைப்பாடு அளித்தால், சட்டப்படி நாங்கள் அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியும்" என்று அமைச்சர் வீரசேகர மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை, லொஹான் ரத்வத்த வெலிக்கடை மற்றும் அநுராதபுரம் சிறைச்சாலைகளில் நடந்த சம்பவங்களுக்குப் பொறுப்பேற்று இராஜாங்க அமைச்சுப் பதவிலியிருந்து விலகியுள்ளார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு நேற்று முன்தினம் அறிவித்தது. (இ)

# சிறுமியை துஷ்பிரயோகம் செய்ய முயன்றவருக்கு மறியலில்

திருகோணமலை, செப். 17

திருகோணமலை மாவட்டம், கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் எட்டு வயதுடைய சிறுமி ஒருவரை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்த முயற்சித்த சந்தேகநபரை இம்மாதம் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கந்தளாய் நீதிவான் விசானி தேனவது உத்தரவிட் டுள்ளர்.

பேராறு, கந்தளாய் பகுதியைச் சேர்ந்த 65 வயதுடைய வயோதிபரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் சிறுமியின் வீட்டில் மலசலக்குழி வேலைகளில் ஈடுபட்டு வந்த நிலையில் சிறுமியின் தாயார் தேவை காரணமாக வெளியில் சென்ற நிலையில், சிறுமியின் ஆடைகளைக் கழற்றி துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்த முயன்றார் எனக் கந்தளாய் பொலிஸ் நிலையத்தில் சிறுமியின் தாயாரால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கமைய குறித்த நபர் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரை கந்தளாய் நீதிவான் நீதிமன்றில் பொலிஸார் ஆஜர்படுத்தியபோதே அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

சிறுமி மருத்துவ பரிசோதனைக்காகக் கந்தளாய் தளவைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ)



## தமிழ் அரசியல்...

மைத்துவ முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த அனுராதபுரம் சிறைச்சாலைக்குள் சென்று தமிழ் அரசியல் கைதிகளுடன் அநாகரிகமாகவும் அச்சுறுத்தலாகவும் நடந்துகொண்டதன் பின்னர் அமைச்சர் நாமல் நேற்று சிறைச்சாலைக்கு சென்று கைதிகளுடன் உரையாடினார்.

“கைதிகள் குழு என்னுடன் ஒரு சந்திப்பைக் கோரியதை அடுத்து அவர்களைச் சந்தித்தேன். அதன்படி, கைதிகளின் கவலைகள் குறித்து பேச்சு நடத்தப்பட்டது.

தமிழ் அரசியல் கைதிகள் குற்றச்சாட்டுகளில் இருந்து விடுவிக்கப்பட்டவுடன் அவர்களின் மறுவாழ்வு மற்றும் சமூகத்தில் மீண்டும் ஒருங்கிணைப்பது உள்ளிட்ட அவர்களின் பிரச்னைகளை நான் கவனிப்பேன் என அவர்களுக்கு உறுதியளித்தேன்” என்று அமைச்சர் நாமல் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

சிறைச்சாலைக்குள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த நடந்து கொண்ட விதம் குறித்து தமிழ் அரசியல் கைதிகள் அமைச்சர் நாமலுக்கு விளக்கினர் என கைதிகள் தரப்பில் இருந்து தெரிவிக்கப்பட்டது.

சிறைச்சாலைக்குள் தமிழ் அரசியல் கைதிகளின் தற்போதைய நிலைமை குறித்து எடுத்து விளக்குவதற்காகவே இந்த சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது என்றும் கூறப்பட்டது. (அ)

## அடிகாயங்களுடன்...

வல் அறிந்த பொலிஸார் அந்தப் பகுதிக்கு சென்று பார்த்தபோது, சடலத்தின் அருகோ உயிரிழந்தவர் பயணித்ததாக நம்பப்படும் மோட்டார் சைக்கிளும் 3 சோடி செருப்புகளும் காணப்பட்டன.

பொலிஸாரின் விசாரணைகளில் மாவிட்டபுரம் - நல்லிணக்கபுரத்தை சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான மதியாபரணம் ஜெனுசன் (வயது -22) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார் என்று தெரிய வந்துள்ளது. இவர் மல்லாகம் பகுதியிலுள்ள மரண சடங்குக்கு சென்றிருந்தார் என்றும் அதன் பின்னர் அடிகாயங்களுடன் மீட்கப்பட்டார் என்றும் தெரிய வந்தது.

ஆனால், மோதல் எங்கு, எவ்வாறு இடம்பெற்றது என்ற விவரங்கள் வெளியாக வில்லை. பொலிஸார் தொடர்ந்தும் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ)

## வெடுக்குநாறி...

இதேசமயம், நேற்று வியாழக்கிழமை மூன்று ஆடம்பர வாகனங்களில் அந்தப் பகுதிக்கு முக்கியஸ்தர்கள் சிலர் சென்று திரும்பியிருந்தனர். எனினும், இவ்வாறு சென்ற முக்கியஸ்தர்கள் யாரென உறுதிப்படுத்த முடியவில்லை என்றும் அவர்கள் எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

நேற்றுக் காலை ஆலயப் பகுதிக்கு பௌத்த தேரர்கள் அமரும் கதிரைகள் மற்றும் முக்கிய பொருட்கள் இராணுவத்தினரால் உழவியந்திரங்களில் எடுத்துச் செல்லப்பட்டன. இதனால், வெடுக்குநாறி மலை சிவன் ஆலயத்தை பௌத்தமயமாக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருக்கலாம் என்றும் அவர்கள் சந்தேகம் வெளியிட்டனர்.

மேலும், அந்தப் பகுதியை உரிமை கொண்டாடி வரும் தொல்பொருள் திணைக்களத்தால் சிவன் ஆலயத்தின் அடையாளங்கள், மக்கள் அங்கு வைத்து வழிபட்ட சூலம் மற்றும் கல்விக்கிரகங்கள் என்பன அங்கிருந்து காணாமல் செய்யப்பட்டுள்ளன. சில விக்கிரகங்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளன என்றும் அந்தப் பகுதியினர் குற்றஞ்சாட்டினர்.

மேலும், இது விடயத்தில் தமிழ் அரசியல்வாதிகள் உடனடியாக தலையிட்டு தமிழரின் பூர்வீக வழிபாட்டிடமான ஆதி லிங்கேஸ்வரர் ஆலயத்தை மீட்டு தருமாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வெடுக்குநாறி சிவன் ஆலயம் கி.மு. 2ஆம் நூற்றாண்டை சேர்ந்ததாகக் கூறப்படுகின்றது. 300மீற்றர் உயர இந்த குன்றுப் பகுதியின் அடிவாரத்தில் கேணி, தமிழ் பிராமிய கல்வெட்டுக்கள் என்பன காணப்படுகின்றன. மலையின் உச்சியில் ஆதி லிங்கேஸ்வரர் ஆலயம் உள்ளது. சிவலிங்கம், சூலம் என்பன அங்கு அமைக்கப்பட்டிருந்தன.

2018 ஆம் ஆண்டு தொல்லியல் திணைக்களம் இந்தப் பகுதியை தனது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்தது. அத்துடன், அங்கு வழிபாடாற்றவோ, பூசைகளை நடத்தவோ முடியாதவாறு தடைவிதித்தது. இது பௌத்த மயமாக்கும் நடவடிக்கை என்று கூறி தமிழ் மக்கள் பெரும் எதிர்ப்பு வெளியிட்டனர். இதைத் தொடர்ந்து நீதிமன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு ஆலயத்தில் பூசை வழிபாடுகளை தொடர அனுமதிக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ -06)

## நாடு திரும்பும்...

நாட்டுக்கு வருகை தரும் இலங்கையர்கள் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகளில் அவர்களுக்குக் கொரோனாத் தொற்று இல்லையென்றால், அவர்கள் வீட்டுக்குச் செல்ல அனுமதிக்கப்படுவார்கள் என்று சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்தப் புதிய நடைமுறையானது அடுத்த வாரம் முதல் அமுலுக்கு வருகின்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாடுகளில் இருந்து வருபவர்களுக்குப் பி.சி.ஆர். பரிசோதனை செய்யப்பட்டு அதன் முடிவுகள் கிடைக்கப் பெறும் வரையில் அவர்கள் ஹோட்டல்களில் தங்கவைக்கப்படும் நடைமுறையே தற்போது உள்ளது.

இவ்வாறு தங்க வைக்கப்படும் ஹோட்டல்களில் அதிக கட்டணம் அறவிடும் மோசடியான செயற்பாடு தொடர்பில் செய்திகள் வெளியாகி இருந்தன.

குறித்த தனிமைப்படுத்தல் ஹோட்டல்களில் இடம்பெறும் இவ்வாறான மோசடி தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவதானம் செலுத்தியதுடன், அது தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார அமைச்சருக்கு அறிவுறுத்தல் வழங்கியிருந்தார்.

அதற்கமைய, வெளிநாடுகளில் இருந்து வருவோருக்கு விமான நிலையத்திலேயே பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொண்டு சில மணித்தியாலங்களுக்குள் அவர்களை வீடுகளுக்கு அனுப்பி வைக்க அரசு தீர்மானித்துள்ளது என சுகாதார அமைச்சர் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் மேலும் கூறியுள்ளார். (இ)

## மேலும்...

விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 11,817 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 118 பேரில் 61 ஆண்களும், 57 பெண்களும் உள்ளடங்கின்றனர் என்று அரச தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் 12 ஆண்கள், 11 பெண்கள் என 23 பேர் 30 - 59 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். 95 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இதில் 49 ஆண்களும், 46 பெண்களும் அடங்குகின்றனர். (இ)

## நேற்று 2,271...

சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 98 ஆயிரத்து 694 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன், கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,336 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 28 ஆயிரத்து 590 ஆக உயர்வடைந்துள்ளது. (இ)

## புலிகளுக்கு...

என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான புளொட்டின் தலைவர் த. சித்தார்த்தன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

எம். ஏ. சுமந்திரன் எம். பி., கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம். பி. ஆகியோரின் புளொட் கட்சிமீதும் அதன் தலைவரான தம் மீதும் சுமத்திய குற்றச்சாட்டுகளுக்கு பதில் அளிக்கும் முகமாக நேற்று அவர் செய்தியாளர் சந்திப்பை நடத்தினார். கந்தோரோடையிலுள்ள அவரின் இல்லத்தில் நடந்த இந்த சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்த முக்கிய அம்சங்கள் வருமாறு,

**கடிதம் குறித்து சம்பந்தன் எமக்கு தெரிவிக்கவில்லை**

ஐ. நா. மனித உரிமைகள் பேரவைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்கள் தேசிய கூட்டணி இணைந்து 5 கட்சிகளாக கடிதம் ஒன்றை அனுப்பினோம். கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனின் ஒப்பத்துடன் இன்னொரு கடிதமும் அனுப்பப்பட்டது. நாம் அனுப்பிய கடிதத்துக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமைக்கும் இடையே சம்பந்தம் இல்லை என்று இரா. சம்பந்தன் கூறினார். செல்வம் அடைக்கலநாதனும் நானும் அதையே கூறினோம். ஆனால், பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனின் ஆவேசத்திற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை.

யாழ்ப்பாணத்தில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் இரா. சம்பந்தன் கடிதம் எழுதுவதை தெரிந்துகொண்டு, அதை மீறி நாம் கையெழுத்திட்டோம் என்று கூறியிருந்தார். ஆனால், உண்மையில் அப்படி நடக்கவில்லை. நாங்கள் கையெழுத்திட வேண்டிய ஒரு கடிதமெனில், அதை எழுத தொடங்கும் போதே இரா.சம்பந்தன் எமக்கு தகவல் தந்து விடுவார். ஆனால், இந்த கடித விவகாரத்தில் கடைசிவரை எனக்கு ஒரு தகவலும் தரப்படவில்லை.

**நாமே விசாரிக்க கேட்பது புத்திசாலித்தனமல்ல!**

எம்மை துரோகிகள், காட்டிக் கொடுத்தவர்கள் என்றும் சுமந்திரன் கூறியிருந்தார். தமிழ் அரசு கட்சியினரும், தமிழ் தேசிய மக்கள் முன்னணியினரும் தேர்தல் காலத்தில் மேடை போட்டு இவற்றைத்தான் கதைத்துக் கொண்டிருப்பார்கள். எனக்கு மக்கள் மத்தியிலிருந்த மதிப்பையும், செல்வாக்கையும் குழப்பு அதை செய்தார்கள் என்பது எனக்கு நன்றாக தெரியும். அது பலனளிக்காது என்பதை தெரிந்ததால் நான் அதை கண்டு கொள்ளாமல் விட்டு விட்டேன்.

ஆனால், இப்பொழுதும் சுமந்திரனும், கஜேந்திரகுமாரும் மீண்டும் புலிகளின் போர்க் குற்றம் பற்றியும், புளொட் அமைப்பும் விசாரிக்கப்பட வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். சுமந்திரன் தயாரித்த கடிதத்தில், தருஸ்மன் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட புலிகளும் போர்க் குற்றத்தில் ஈடுபட்ட பகுதி இணைக்கப்பட்டுள்ளது. அது அவர்களின் நிலைப்பாடு. அது வேறு விடயம். ஆனால், நாங்கள் தமிழ் தரப்பாக இருந்து கொண்டு, நாங்களே எங்களை விசாரிக்க கோருவது எவ்வளவு புத்திசாலித்தனம் என எனக்கு தெரியவில்லை.

**விசாரணையை ஏற்க நாம் தயார்!**

அடுத்தது, நாங்களே விசாரிக்கக் கோருவது, நாங்கள் ஏதோ பெரிய குற்றம் செய்து விட்டோம் என நாங்களே ஒத்துக் கொள்வதை போல அமையும். எல்லா இயக்கங்களுக்கு இடையிலும் ஒன்றுக்கு கொன்று பல பிரச்னைகள் இருந்தன - மோதல்களும் நடந்தன. அது உண்மை. அதற்காக எந்த சந்தர்ப்பத்திலும், புலிகளை விசாரியுங்கள் என நான் கூற தயாராக இல்லை.

எங்களை விசாரிப்பதென ஒரு நிலை வந்தால், அதற்கு நாம் தயாராக இருக்கிறோம். ஒரு சர்வதேச விசாரணை ஏற்க நாம் தயாராக இருக்கிறோம். அப்படியொன்று நடந்தால்தான், நாம் எந்தவித குற்றங்களும் செய்யவில்லை என்பதை நிரூபிக்க முடியும். நாம் சர்வதேச விசாரணையை கோர மாட்டோம் என சுமந்திரன் கூறியிருந்தார். அவருக்கு தெரியாது, நாம் ஏற்கனவே பலமுறை அதை கோரிவிட்டோம்.

1994களின்போது பாராளுமன்றில் பேசும்போது, விடுதலைப் புலிகளுடன் எமக்கு பிரச்னைகள் இருந்தாலும், சமரச பேச்சு என்று வந்தால், அரசாங்கம், விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த வேண்டுமென பலமுறை கூறியிருக்கிறேன். ஏனெனில், அவர்கள் இல்லாத தீர்வு முழுமையடையாது. எங்களுடன் பேசாவிட்டாலும், புலிகளுடன் பேசி ஒரு தீர்வை நடைமுறைப்படுத்தினால் எமக்கும் அதில் பிரச்னை வராது என கூறியிருந்தேன்.

சுமந்திரனும், கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் கூறியிருக்கிறார்கள், கே. பி, கருணா, பிள்ளையான்போல புளொட்டையும் விசாரிக்க வேண்டுமென. கே. பி, கருணா, பிள்ளையான் ஆகியோர் விடுதலைப் புலிகளை விட்டு வெளியேறிய பின்னர் நடந்தவற்றிற்கு இவர்கள் விசாரணை கோரவில்லை. அவர்கள் புலிகள் அமைப்பில் இருந்த போது செயல்பட்டமைக்கே இப்பொழுது இருவரும் விசாரணை கோருகிறார்கள்.

கே .பி யுத்தம் முடிந்த பின்னர் கைது செய்யப்பட்டு இலங்கைக்கு கொண்டு வரப்பட்டவர். அவர் அதன் பின்னர் இலங்கையில் கிட்டத்தட்ட வீட்டுக்காவலில் இருக்கிறார். அவருக்கு பாதுகாப்பாக 10-15 இராணுவச் சிப்பாய்கள் உள்ளனர். அவரை விசாரிப்பதெனில் முழுக்க முழுக்க அவர் விடுதலைப் புலிகள் காலத்தில் செயல்பட்டமைக்காகவே விசாரிக்கப்பட வேண்டும். இதில் இன்னொரு விடயமுள்ளது. அவரை விசாரிப்பதெனில், அவருடன் செயற்பட்ட ஏராளம் புலம்பெயர் தமிழர்கள் உள்ளனர். இந்த விசாரணை வலைப்பின்னல் பெரிதாகிக் கொண்டே போகும். இது அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரல். அரசாங்கத்தின் நிலைப்பாட்டை ஒத்ததாகவே இவர்களின் கோரிக்கை உள்ளது.

**கஜேந்திரகுமார் வீட்டுக்கு நாம் பாதுகாப்பு அளித்தோம்!**

சுமந்திரனும், கஜேந்திரகுமாரும் கூறியதற்கு பின்னர், இப்பொழுது வாசுதேவ நாணயக்காரவும், புலிகள் மீது விசாரணை நடத்த வேண்டுமென கூறியுள்ளார். என்னை விசாரிக்க வேண்டுமென கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறுவதில் ஒரு நியாயம் உள்ளது. அவரிடம் எங்களைப் பற்றிய ஓர் ஆதாரமுள்ளது. அவரின் தந்தையார் குமார் பொன்னம்பலம் எம்மை தொடர்பு கொண்டு, எந்த தரப்பாலோ தமக்கு உயிராபத்து உள்ளது. அதனால் எமது தோழர்கள் சிலரை அனுப்பி தமது வீட்டுக்கு பாதுகாப்பு தரும்படி கேட்டிருந்தார்.

எங்கள் தோழர்கள் அவர்களின் வீட்டுக்கு பாதுகாப்பு வழங்கினார்கள். அப்பொழுது சிறுவனாக அதையெல்லாம் பார்த்து வளர்ந்தவர் கஜேந்திரகுமார். தனது தந்தையுடன் சேர்ந்து இவர்கள் சட்டவிரோதமாக ஏதோ செய்கிறார்கள் என அப்போது அவருக்கு விளங்கியிருக்க வில்லை. இப்பொழுது அவர் விசாரணை கோருகிறார் என நினைக்கிறேன்.

**புலிகளை விசாரிக்கவே சுமந்திரன் கோருகிறார்**

எம்மை தூண்டி விடுவதற்கே இந்த குற்றச்சாட்டுக்களை இவர்கள் தெரிவிக்கிறார்கள். நாம் இதற்கு சரியாக பதில் சொல்ல முயன்றால், அந்த பதில்கள் எமக்கு எதிராக மட்டுமல்ல, புலிகளுக்கு எதிராகவும் அவை பயன்படுத்தப்படும். ஆகவேதான், எங்களை தூண்டிவிட இருவரும் முயற்சிக்கிறார்களோ என்ற சந்தேகமும் எனக்குண்டு. ஆனால், இங்கு சுமந்திரன் கூறுகிறார். அவர் எங்களை விசாரியுங்கள் எனக் கோரவில்லை. புலிகளை விசாரிக்கவே கோருகிறார் - என்றார். (ஐ)

## தமிழ் அரசியல்...

விடுதலையான அரசியல் கைதி, இறுதிப் போரில் இராணுவத்தினரிடம் சரணடைந்து புனர்வாழ்வின் பின்னர் விடுவிக்கப்பட்டார்.

எனினும், கடந்த 2013ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட இவர் எந்த வழக்கு விசாரணைளுமின்றி கடந்த 8 வருடங்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். இந்த நிலையிலேயே சட்ட மா அதிபர் திணைக்களத்தின் பணிப்புரைக்கமைய அவர் விடுதலை செய்யப்பட்டார். (ஐ)

ஈழநாடு
Eelanadu




# தேசிய வளங்களை விற்று வாழ்வதற்கு முயற்சிக்காதீர்

## அரசுக்கு எதிராக சஜித் அணி கண்டனம்



**கொழும்பு, செப்.17**

**அரசு, தேசிய வளங்களை விற்று வாழ்வதற்கு முயற்சிப்பது முற்றிலும் தவறான விடயமாகும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்த நாயக்க தெரிவித்தார்.**

*கொழும்பில் நேற்று ஊடகவியலாளர்களுக்குக் கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.*

*அவர் மேலும் தெரிவித்ததாவது:-*

*“விசேடமாக செலந்திவா நிறுவனத்தினூடாக நாட்டின் தேசிய சொத்துக்களைச் சட்டபூர்வமாக விற்பனை செய்வதற்கு அரசு முயற்சித்து வருகின்றது.*

*குறிப்பாக கொழும்பு நகரின் முக்கிய இடங்கள், சொத்துக்கள் என்பற்றைக் குறித்த நிறுவனத்தினூடாக விற்பனை செய்வதற்கு நட வடிக்கை எடுத்துள்ளது.*

*இந்நிலையில், அரசு தற்போது புதிதாக துறைமுக அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் இருக்கும் அரசின் 13 ஏக்கர் நிலப் பரப்பை அடி மட்ட விலைக்கு விற்பனை செய்வ தற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. இதனை நினைத்தும் பார்க்க முடியவில்லை.*

*சீன நிறுவனமொன்று கொழும்புத் துறைமுகத்தின் 13 ஏக்கர் நிலப்பரப்பைத் தருமாறு அரசிடம் கோரியுள்ளது. எதற்காக இந்த நிலப்பரப்பை விற்பனை செய்கின்றனர்? இவை நாட்டின் தேசிய வளங்களாகும்.*

*நாட்டின் பொருளாதாரத்துக்கு ஆணிவேராக இருக்கின்ற துறை முகம், விமான நிலையம் போன்ற இடங்களை விற்பனை செய்வதனூடாக எவ்வாறான வியாபாரத்தை முன்னெடுப்பதற்கு அரசு முயற்சிக்கின்றது?*

*அரசிடம் பணம் இல்லையாயின் பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கான மாற்று வழிகளைக் கையாள வேண்டும்.*

*அரசு டொலரைப் பெற்றுக் கொள்வதற்காகத் துறைமுக அபிவிருத்தி அதிகார சபையின் பொறுப்பிலுள்ள 13 ஏக்கர் நிலப்பரப்பை அடிமட்ட விலைக்கு விற்பனை செய்வதற்கு எடுக்கும் முயற்சிக்கு நாம் முழுமையான எதிர்ப்பைத் தெரிவிக்கின்றோம்.*

*இதற்கு துறைமுக அதிகார சபை அதிகாரிகள் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். துறைமுக ஊழியர்கள் எதிர்ப்பை தெரிவிக்கின்றனர்.*

*தேசிய ரீதியில் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டு வருபவர்கள் மட்டுமன்றி நாட்டு மக்கள் அனை வருமே இதற்கு எதிர்ப்பைத் தெரி விக்கின்றனர்.*

*இவ்வாறான எதிர்ப்புகள் இருக்கும் போது இந்த விற்பனை நடவ டிக்கையை முற்றாக நிறுத்துமாறே நாம் அரசைக் கோருகின்றோம்.*

*துறைமுக இடத்தை மட்டுமல்ல கொழும்பு நகரிலுள்ள முக்கிய இடங்களை விற்பனை செய்வதையும் உடன் நிறுத்துமாறு கோரு கின்றோம்.*

*இந்த விற்பனைகளின் மூலம் இறுதியில் என்ன நடக்கப்போகின்றது. எமது நாட்டிலுள்ள சகல தேசிய வளங்களும் இல்லாமல் போகும். தேசிய வளங்களை விற்று வாழ்வதற்கு முயற்சிப்பது முற்றிலும் தவறான விடயமாகும்” - என்றார். (இ)*

## மரண அறிவித்தல்



மலர்வு 05 - 05 - 1935

உதிர்வு 12 - 09 - 2021

### முத்துக்குமாரு சுப்பிரமணியம்

*(இளைப்பாறிய மின்சார சபை உத்தியோகத்தர்)*

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், பிரித்தானியா லண்டனை வதிவிடமாகவும் கொண்ட முத்துக்குமாரு சுப்பிரமணியம் 12-09-2021 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற இராசம்மா- முத்துக்குமாரு தம்பதியரின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்ற பொன்னம்மா - கணபதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும்,அரியரத்தினம்(அன்னம்) அவர்களின் அன்புக் கணவரும்,சுகந்தினி(இத்தாலி), உதயமோகன் (லண்டன்), சத்தியமோகன்(லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற நாகேஸ்வரி, யோகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், யசோதரன் (இத்தாலி), பஞ்சசீலி(லண்டன்), அனுஷா(லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும்,காலஞ்சென்ற பரமலிங்கம், இரத்தினம், தியாகராஜா(இலங்கை), நாகேஸ்வரி, சிதம்பரபூபதி, காலஞ்சென்ற மகேந்திரராஜா, சாந்தினி ஆகியோரின் அன்பு மைத்துனரும், கனடாவைச் சேர்ந்த ஞானவரோதயன், உதயகுமார், சசிகலா, சாமினி, சாந்தினி, சாவித்திரி, சத்தியா, டென்மார்க்கைச் சேர்ந்த காலஞ்சென்ற பாலச்சந்திரன், ஞானச்சந்திரன், சிவச்சந்திரன், ஜமுனா, பத்மஜோதி ஆகியோரின் அன்புத் தாய் மாமாவும்,பிரவீணா(லண்டன்), கீர்த்தனா வேணன் (லண்டன்), விஷ்ணுகா(லண்டன்), வருண்(லண்டன்), அர்ச்சுனா (லண்டன்), வியாசன்(லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

*கிரியை*
Sunday,19 Sep 2021 9:00 AM
Aldersbrook Bowls Club 34 Aldersbrook Rd, London E12 5DY, United Kingdom

*தகனம்*
Sunday, 19 Sep 2021 12:00 PM
City of London Cemetery & Crematorium Aldersbrook Rd, London E12 5DQ, UK

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தொடர்புகளுக்கு:*
**மோகன் (மகன்)**
**+447983314000**

தகவல்:
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



மலர்வு 25 - 05 - 1939

உதிர்வு 14 - 09 - 2021

### திருமதி பரிமளம் செல்வராஜா

கோண்டாவில் வடக்கு கலைவாணி வீதியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட பரிமளம் செல்வராஜா 14.09.2021 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான பொன்னையா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கனகரெத்தினம் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற செல்வராஜா அவர்களின் அன்பு மனைவியும்,இராஜகுமார்(பொறியியலாளர்), யசோதா(சமுர்த்தி உத்தியோகத்தர் நல்லூர்), நந்தகுமார்(பொறியியலாளர்- லண்டன்), வசந்தி(முன்னைய சமுர்த்தி உத்தியோகத்தர்- கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, இராஜேஸ்வரி, அன்னலட்சுமி மற்றும் நடராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும்,மயில்வாகனம், சிவபாக்கியம் ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சிவபாதசுந்தரம், பூபாலசிங்கம், வாமதேவன், இராஜலட்சுமி, தேசோமயம் மற்றும் நாகராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும்,Dr.அனுராதா(NHSL- Colombo), கருணாகரன், சாந்தி(லண்டன்), டினேஸ் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், தனுஸ்யா, அபிஷேக், பிருசா, மிதுசா, கம்சியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை சுகாதார முறைப்படி 19.09.2021 ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தொடர்புகளுக்கு:*
**வசந்தி - (மகள்)**
*+16472782722*

*தகவல்:*
**குடும்பத்தினர்.**




*இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 17.09.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.*

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திபாடல்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
07.05 மணி : உளவியல் கருத்து-உளவள துனையாளர் திரு.நா.நவராஜ்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர்: டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகள்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை- நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : மாதம் ஒரு இசைக்குழு- மறுஒளிபரப்பு

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
01.00மணி : துறைக்கு அப்பால் (மறுஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-கலகலப்பு-02,ராட்சசன் திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : Short Film
6.00 மணி : ஹொலிவுட் சுப்பர் 10




**இரவு**
7.00 மணி : ரசிகன் என்கின்ற தலைவன்- நகைச்சுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம் - தமிழ்த் தேசிய அரசியலில் ஒற்றுமை



10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : திரைப்படம்

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : திரைப்படம்
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இயேசுவின் போதனைகள் (மறுஒளிபரப்பு)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: ஜெபங்கேளும் திருகோணமலை நிகழ்ச்சி
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : அன்பியம் சனி மறுஒளிபரப்பு

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (யாழ்ப்பாணம்)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (யாழ்ப்பாணம்)

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்